# திராவிடன்

மாலை : 9 16—9—55 : வெள்ளி : : விலை 3 அணு மலர் : 5

# பிடிவாதம் காட்டுகிருர்களாம்!

இந்திய சமஸ்தானுதிபதிகளுக்கு (ராஜ்யப் பிரமுகர்கள்) இந்திய அரசியலார் தாங்கள் திரட்டும் வரிப்பணத்திலிருந்து ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய்களைச் சம்பளமாகக் கொடுத்து வருகின்றனர்! குறிப்பாக நிஜாம் மன்னருக்கு ஆண்டு தோறும் 50 லட்ச ரூபாயும், அவரைப்போன்ற ஏனைய ராஜாக்களுக்கு 30 லட்சம், 40 லட்சம் போலவும் அள்ளிக் கொடுக்கப்பட்டு வருகிறதாம்!

இந்தச் சம்பளங்களை ராஜப் பிரமுகர்கள், தாங்களாகவே குறைத்துக் கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும், தங்களின் சம்பளத்திலிருந்து ஒரு தம்பிடி கூட குறைத்துக் கொள்ள முடியாதென்று நிஜாம் மன்னரும் ஏனைய குட்டி ராஜப்பிரமுகர்களும் பிடிவாதம் காட்டுகின்றனராம்!

ஆகவே இந்தப் பிரச்சினையை இந்திய அரசியலார் எப்படித் தீர்கப் போகின்றனரோ யென்று தேசியத் தலைவர்களில் சிலர் தங்களின் அபார மூளையைக் குழப்பிக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

தர்பாா சுந்தரர்களாக வீற்றிருந்த இந்த "ராஜாக்கள்" இவ்வாறு பிடிவாதம் காட்டுவதில் அவ்வளவாக ஆச்சரியமிருக்க முடியாது. ஆனல் தரித்திர நாராயணர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டவர்கள் இந்த ராஜாக்களைப் போலவே இன்று மக்களின் வரிப் பணத்திலிருந்து சம்பளச் செலவுக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை ஆண்டு தோறும் பெற்று வருவதுதான் மிக விசித்திரமாயிருக்கிறது.

உதாரணமாக சென்னை, பம்பாய், உத்திரப்பிரதேசம் போன்ற மாநில கவர்னர்களுக்கும் இந்த ராஜப்பிரமுகர்களுக்கும் உள்ள அதிகாரங்கள் ஏறத்தாழ ஒருமித்ததாகவே யிருந்து வருகிறது.

இந்த மாநில கவர்னர்களுக்கும் சம்பளச்செலவுகள் என்றபேரால் ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு வருகிறது.

அச்செலவுகளையும் சம்பள விகிதத்தையும் குறைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்றும் இன்னும் சொல்லப்போனல் இன்றையநிலையில் கவர்னர் பதவிகள் அவசியந்

நக்கீரன்

தானு என்பதை இந்திய அரசியலார் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றும் திராவிட முன்னேற்றக் கழகமும் அரசியல் யூகம் படைத்த ஏனையோரும் எடுத்துக் காட்டும் வேண்டுகோளை ஏற்க மனவளம் பெருதவர்களாய் தரித்திர நாராயணர்கள் பிடிவாதம் காட்டித் தத்துவார்த்தம் பேசுகின்றனரே அப்போக்குதான் முன்னுள் தர்பார் சுந்தரர்களின் (சமஸ்தானுதிபதிகள்) போக்கைவிட விந்தையா யிருக்கிறது!

எனவே சமஸ்தானுதிபதிகளின் இப்பிடிவாதம் வளருவதற்கோ அல்லது அவர்கள் தங்களின் ஜபர்தஸ்தின் கண்ணேட்டத்திலிருந்தே "தர்பார்" நடத்த நப்பாசைகொள்வதோ ஆகியஅனைத்துக்கும் நேரு பண்டிதர் ஆட்சியில் கவர்னர் பதவிகளுக்குச் செலவழிக்கப்படும் லட்சக்கணக்கான ரூபாய் செலவுகள் மற்ற படாடோபங்களே முக்கிய காரணமா யிருந்து வருகிறது.

எனவே நிஜாம் மன்னர் போன்றவர்களின் பிடிவாதம் தலைகுனிய வேண்டுமானல் கவர்னர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் கொழுத்த சம்பளங்கள், மற்ற செலவுகள் ஆகியவைகளைஅறவே கைவிட வேண்டும் அல்லது மிக மிகக் குறைந்த செலவுக்கு அப்பதவியின் பேரால் நடைபெற்று வரும் நடவடிக்கைகளைத் திருத்த வேண்டும்.

இந்த அளவுக்கு நேரு சர்க்கார் மனவளம் பெற்று எவ்வளவு விரைவில் திருந்துகிருர்களோ அதற்கேற்ப சமஸ்தானுதிபதிகளின் பிடிவாதத்தையும் பணிய வைக்க முடியும்.

எனவே சமஸ்தானுதிபதிகளின் பிடிவாதம் பிசுபிசுத்துப் போக வேண்டும் என்ற நல்ல எண்ணம் டெல்லி தேவதைகளுக்கு உண்மையிலேயே இருக்குமானல் அதற்கு துவக்க நடவடிக்கையாக ஏழை மக்களின் வரிப் பணத்திலிருந்து ஆண்டு தோறும் பல லட்ச ரூபாய்களைச் செலவழித்து வரும் ஏகாதிபத்ய பிடிவாதப் போக்கிலிருந்து நேரு சர்க்கார் திருந்துவார்களாக.

## சென்னையில் நாட்டுப் பிரிவினை வாரம்

### அறிஞர் அண்ணு சொற்பொழிவாற்றுவார்கள்.

**பெரம்பூர் ரயில்வே தொழிலாளர்கள்**
**மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பார்கள்**

**ஊர்வலம் :** 18—9—55 ஞாயிறு மாலை 3–மணிக்கு சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் சிந்தாதரிப்பேட்டை நேப்பியர் பார்க்கிலிருந்து செயலாளர் இளம்பரிதி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு பெரம்பூர் ஏரிக்கரை சென்றடையும்.

**பொதுக்கூட்டம் :** பிரப்பூர் (6–வது வட்டம்) தி. மு. கழக சார்பில் மாலை 6–மணிக்கு பிரம்பூர் ஏரி மைதானத்தில் தோழர் டி.சண்முகம், எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும். அறிஞர் அண்ணு அவர்கள் சொற்பொழிவாற்றுவார். அதுசமயம் பிரம்பூர் ரெயில்வே தொழிலாளர் சார்பில் மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.



# ஐந்தாண்டு திட்டங்களின் லட்சணம் இதுதானு?

## அமைச்சர் சுப்ரமண்யனுரே கேண்மின்!

## சட்டசபையில் தோழர் எ. கோவிந்தசாமி இடித்துரை

**26—8—55-ம் நாளன்று சென்னை சட்டசபைக் கூட்டத்தில் தோழர் எ. கோவிந்தசாமி அவர்கள் பேசியதின் விவரம் வருமாறு:—**

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், முதல் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சர்க்கார் சொல்லுகிற பிரகாரம் தொழில் வளர்ச்சியோ, வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்போ, மக்களுடைய வாழக்கைத் தர உயர்வோ, ஏற்பட்டதாகக் காணவில்லை. நிதிமந்திரி அவர்கள் சொல்லியதிலிருந்து மூன்று சதவிகித அளவு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாட்டில் ஏராளமாகப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது, நோக்கம் நல்லதாகச் சொல்லப்பட்டாலும் கூட இந்தத் திட்டம் பரவலான முறையில் ஏற்படவில்லை, பரவலான முறையில் ஏற்படச் செய்தால்தான் அரசாங்கத்தின் முக்கியமான குறிக்கோள் நிறைவேறும். ஆனுல் வடநாட்டைத் தொழில் மயமாக்கி தென்னுட்டை அதற்கு மார்க்கெட்டாக ஆக்கிக் கொண்ட அளவுக்குத்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடந்தவந்து இருக்கிறது. வடநாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு தென்னுட்டை மார்கெட்டாக மட்டும் ஆக்கினுல் சுதந்திர சோஷலிச சர்க்கார் நடக்கிறது என்று சொல்வதற்கு அழகாக அமைய முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னுட்டில் உற்பத்தியாகும் மணிலாப் பயிரைக் கொண்டுபோய் சோப்பாகவும் வனஸ்பதியாகவும் வடநாட்டில் செய்து தென்னுட்டின் தலையிலே திணிக்கிருர்கள். தென்னுட்டை ஒரு மார்க்கெட் ஸ்தலமாக ஆக்கியிருக்கிருர்கள், நீண்ட காலமாக வடநாடு அரசாங்கத்தாராலும் தனிப்பட்டவர்களாலும், தொழில் மயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தென்னுடு விவசாய நாடாக இருக்கிறதேயொழிய தொழில் துறையில் முன்னேறுமலேயே இருக்கிறது.

விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், நீர்ப்பாசன திட்டங்களும் மின்சாரத் திட்டங்களும் வடநாட்டில் ஏராளமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏராளமான பணத்தை செலவு செய்திருக்கிருர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக பல திட்டங்கள் இருக்கின்றன.

கோசித் திட்டத்திற்கு 66 கோடி ருபாயும், பக்ராநங்கல் திட்டத்திற்கு 156 கோடி ருபாயும் தாமோதர பள்ளத்தாக்கு திட்டத்திற்கு 200 கோடி ருபாயும் ஹிராகுட் திட்டத்திற்கு 92 கோடி ருபாயும் செலவு செய்து இருக்கிருர்கள். ஆனுல் இங்கே கீழ்பவானி திட்டத்திற்கு 9 கோடி ருபாயும் மலம்புழா திட்டத்திற்கு 4 கோடி ருபாயும் சேலம் மேட்டூர் கால்வாய் திட்டத்திற்கு 2 கோடி ருபாயும் செலவு செய்திருக்கிருர்கள், இதிலிருந்து வடநாட்டுக்கும் தென்னுட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள், 200 கோடி ருபாய் எங்கே? 9 கோடி ருபாய் எங்கே? அதில் உள்ள வித்தியாசத்தை அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கிருர்கள்.

காங்கிரசை ஆதரிக்கின்ற ஏடாகிய சுதேசமித்திரன் பத்திரிகையில் முன்பு ஒரு படம் போடப்பட்டிருந்தது. அந்த ஒரு படத்தை நிதிமந்திரி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அந்தப் படத்தை அவர்களுக்கு காட்டப் போகிறேன். ஏன் இந்த பாரபட்சம் என்ற தலைப்புடன் சுதேசமித்திரன் பத்திரிகையில் ஒரு படம் வந்திருந்தது அந்தப் பத்திரிகையின் நகல் ஒன்றை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். நிதிமந்திரி அவர்களுக்கு இந்தப் பத்திரிகையை சபாநாயகர் மூலமாக சமர்ப்பிக்கிறேன்.

கனம் சுப்ரமண்யம் :— சுதேசமித்திரன் பத்திரிகைக்கு அங்கத்தினர் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதற்கு காரணம் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஏ. கோவிந்தசாமி : —சுதேசமித்திரன் பத்திரிகை ஏக இந்திய கொள்கையை பரப்புகின்ற ஒரு பத்திரிகையாகும், வடஇந்தியா தென்னுட்டின் தேவையைப் புறக்கணிக்கிறது என்பதை சுதேசமித்திரன் பத்திரிகையும் உணர்ந்து அதை சித்தரிக்கும் வகையில் படம் போட்டிருப்பதைக் கண்டு நான் வரவேற்கிறேன், அந்த அளவு அவர்கள் உணர்வு பெற்றிருக்கக் கூடியதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். அந்தப் படத்தை மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

சபாநாயகர் மூலமாக இந்த தருணத்தில் படத்தை அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களிடம் எ. கோவிந்தசாமி கொடுத்துவிட்டு தொடர்ந்து பேசியதாவது.

இந்தப் படத்தில் வடநாட்டாருக்கு பலகாரம் அதிகமாக வைத்திருப்பதைப் பாருங்கள் அவர்களுடைய தட்டு நிறைய பலகாரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் தென்னுட்டுக்கு ஒரே ஒரு தட்டு அதுவும் வெறும் தட்டு வைக்கப்பட்டு இருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகின்றது! வடநாட்டிற்கே வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் இது காட்டுகின்றது.

நமது நிதிமந்திரி அவர்களின் குருவான ராஜாஜி அவர்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியார்களின் கூட்டத்தில் பேசியிருக்கிருர், வடநாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி என்ற பசு மாட்டிற்கு தென்னுட்டுக்காரர்கள் தீனி வைக்கிருர்கள் வடநாட்டுக்காரர்கள் பால் கறக்கிருர்கள், என்று அந்தக் கூட்டத்தில் பேசினுர், அதைச் சித்தரிக்கும் வகையில் 'கல்கி' பத்திரிகையில் ஒரு படம் வந்திருந்தது. அந்தப் படத்தையாவது நிதிமந்திரி அவர்கள் பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன்.

இந்த உணர்ச்சி நிதிமந்திரி கனம் திரு. சுப்ரமண்யம் அவர்களுக்கும் வந்திருக்கிறது. திட்டக் கமிஷனிலும் வடநாட்டு ஆதிக்கம் இருக்கிறது. ஜனத்தொகை அடிப்படையில் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 500-கோடி ருபாய்க்குப் பதிலாக நிதிமந்திரி அவர்கள் நல்ல புத்தியோடு 400 கோடி ருபாய் கேட்டார்கள், ஓரளவு குறைத்துக் கொண்டு, ஆனுல் வடநாட்டார் 200-கோடி ருபாய்தான் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிருர்கள். நேற்று முன்தினம் பத்திரிகையில் பார்த்ததில் 180 கோடிதான் கொடுக்கப் போகிருர்கள் என்று தெரிகிறது. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைதான் எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. நாங்கள் எப்படி வேதனைக் குரலில் சொல்லுகிருேமோ அதே முறையில்தான் நிதிமந்திரி அவர்களும் திட்டக் கமிஷன் கூட்டத்திலேயும் பேசியிருப்பார் என்பதில் சந்தேகம் இருக்காது. ஆளும் கட்சியாக இருந்தாலுங்கூட குறை சொல்லாமல் விடவில்லை என்பதையும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

வடநாட்டார் நம்மைக் கவனிக்காமல் ஆட்சிபீடத்தில் அதிகாரத்தோடு இருப்பதால்தான் அவர்களுடைய ஏகாதிபத்ய பிடியிலிருந்து நாம் விலக வேண்டும் என்று நாங்கள் சொல்கிருேம். வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாம் பிரிந்து தனிசுதந்திர திராவிட நாடாக இருக்க வேண்டும்.

சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த திரு நல்லசிவம் அவர்களும் மற்றும் திரு பழனியாண்டி அவர்களைப் போன்றவர்களும் வடநாடு தென்னுடு வித்தியாசத்தை உணர்ந்து நல்ல முறையில் சொல்லியிருக்கிருர்கள். காங்கிரஸ்காரர்களும் அதைக் குறிப்பாகப் பேசியிருக்கிருர்கள். அதை வரவேற்கிருேம், அந்த முறையில் இவ்வுணர்ச்சி வளர்ந்து நல்ல பரிகாரம் தேட வேண்டுமென்றே நாங்கள் சொல்லுகிருேம்.

மக்கள் அடிப்படையில் தொகையைப் பிரிக்க வேண்டுமென்று நிதிமந்திரி அவர்கள் சொன்னுர்கள், மக்களுடைய பொருளாதார அடிப்படையில்தான் தொழில் வளர முடியுமே தவிர, ஜனத்தொகை அடிப்படையை மட்டும் பார்க்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தென்னுட்டிலே தொழில் வளரவில்லை என்று நிதிமந்திரி அவர்களே ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிருர். தென்னுட்டிலே தொழிற்சாலைகள் அதிகம் ஏற்பட வேண்டுமென்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிருர்கள், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தரப்பிலிருந்து நாங்கள் சொல்கிருேம்.

நெய்வேலித் திட்டத்தை ஏன் துரிதமாக அமல் நடத்தவில்லை! திட்டம் சந்தேகத்திற்கிடமாக இருப்பதாகச் சொல்லப்படுவதற்குக் காரணம் என்ன! தென்னுட்டில் நெய்வேலி இருப்பதுதான். இதே வசதி வடநாட்டில் இருந்திருந்தால்எப்பொழுதோ திட்டம் அமுலுக்கு வந்திருக்கும். வடநாட்டில் இல்லாமல் தென்னுட்டில் நெய்வேலித் திட்டம் இருப்பதால்தான் வடநாட்டார் அசிரத்தையாக இருக்கிருர்கள். நெய்வேலித் திட்டம் வெற்றி பெற்ருல் பல உப தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு வசதி ஏற்படும், மின்சார திட்டம் ஏற்படலாம் நெய்வேலித் திட்டம் வெற்றி பெற்ருல் இந்தியா பூராவும் ரயில் விடுவதற்கு நிலக்கரி கிடைக்கும் என்று வடநாட்டுக்காரர்களே சொல்கிருர்கள், அதுமட்டுமல்ல தென்னுடு பூராவும் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கலாம் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்,

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரீக்ஷார்த்தமாக சில ஜில்லாக்களை அபிவிருத்தி செய்வதற்காக எடுத்துக் கொள்கிருர்கள் ஆனுல்பின்தங்கின ஜில்லாக்களான வடஆற்காடு,தென்னுற்காடு திருச்சி ஜில்லாக்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதன் காரணமும் எனக்கு விளங்கவில்லை, அந்த ஜில்லாக்கள் விஷயத்திலும் சர்க்கார் அக்கரை காட்ட வேண்டாமா! பின் தங்கிய ஜில்லாக்களை முன்னேற்றினுல்தானே சுதந்திர சோஷலிச சர்க்கார் என்று சொல்லிக்கொள்ள முடியும்! பின்தங்கிய தென்ஆற்காடுஜில்லாவானது ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

தென்ஆற்காடு ஜில்லாவில் அதிகமாக உற்பத்தியாகும் பொருள் மணிலாக் கொட்டை. மணிலா பயிரிலிருந்து வனஸ்பதி தயார் செய்யலாம், ஆகவே விழுப்புரத்தில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை ஏற்பாடு செய்தார்கள். அது இப்பொழுது வேலை செய்யாமல் இருக்கிறது. அதைத் திரும்பவும் திறப்பதற்கு துரிதப்படுத்த வேண்டும்.

தென்னுற்காடு ஜில்லாவில் கரும்பாலையொன்றை விழுப்புரம் அடுத்த கோலியனூர் கிராமத்தில் நிறுவப் போவதாகச் சொன்னுர்கள், ஆனுல் அத்த யோசனையை விட்டுவிட்டதாகத் தெரிகிறது. கோலியனூரிலும், கள்ளக்குறிச்சியிலும் சக்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும்.

கடலூரில் உயர்தரக் கலைக் கல்லூரியொன்றை ஏற்படுத்த வேண்டும். ஏனென்ருல் தென்ஆற்காடு ஜில்லாவுக்கு கடலூர் தலைநகரமாக இருக்கிறது, அங்கு ஒரு கலைக் கல்லூரி அவசியமாக தேவைப்படுகிறது.

கள்ளக்குறிச்சியில் மூங்கில் அதிகமாக கிடைக்கிறது. அதைக் கொண்டு ஒரு நியூஸ் பிரிண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். கடலூரிலும் திண்டிவனத்திலும் சவுக்கு ஏராளமாக பயிர் செய்யப்படுகிறது. அங்கு ஒரு காகித உற்பத்திசாலையை ஏற்படுத்தலாம்.

தென்னுட்டில் உருக்கு ஆலையை ஏற்படுத்துவதற்கு போதுமான வசதியில்லை என்று சொல்லுகிருர்கள். பென்சில், உர உற்பத்திசாலையாவது ஏன் ஏற்படுத்தக் கூடாது! தென்னுட்டில் இதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன.

சிறு சிறு நீர்ப்பாசனத்திற்காக 300 குழாய்க் கிணறுகள் ஐந்து வருஷத்தில் வைக்கப் போவதாக சொல்லப்படுகிறது; அப்படியென்ருல் வருஷத்திற்கு 60 குழாய் கிணறுகள்தான் வைக்க முடியும்; 20 ஆயிரம் கிராமங்களில் ஐந்து வருடத்திலே நீர்ப்பாசனத் திட்டம் எந்த அளவு வெற்றி பெறும்! எப்படி விவசாயம் முன்னுக்கு வரும் என்பது தெரியவில்லை. என்னுடைய தொகுதியாகிய விக்கிரவாண்டியில் ஐந்து ஆயிர ருபாயில் நிறைவேற்றக் கூடிய திட்டத்தைக்கூட செய்யாமல் இருக்கிருர்கள். பனமலை ஏரிக்குத் தண்ணீர்வர நந்தன் கால் வாய்க்காலை வெட்ட வேண்டும், அதனுல் 4000, 5000 ஏக்கர் பயனடையும் என்று நினைவூட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விக்ரவாண்டி — பிரன்சு வாய்க்காலை ஆழப்படுத்துவதோடு மேற்கண்ட வாய்க்காலிலிருந்து வெட்டுக்காடு கிராமத்திற்கு தொரவிக்குப் பக்கத்திலிருந்து கிளைவாய்க்கால் ஒன்று வெட்ட திட்டம்போட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தை துருவித் துருவிப் படித்தேன். அதில் மதுரையில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி அமைப்பதற்குஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் காங்கிரஸ் ஆட்சியில் பயித்தியக்காரர்கள் அதிகமாக உற்பத்தியாகிருர்கள் என்பதற்கு இது அத்தாக்ஷியாகிறது, இம்மாதிரி பைத்தியக்கார ஆஸ்பத்திரி அமைப்பதற்கு பதிலாக திட்டத்தால் மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று கூறிமுடித்தார்.

# மறையா மாமணி!

'திருவேடம்'

இற்றைக்குச் சரியாக இரண்டு ஆண்டுகட்கு முன்பு அதாவது 1953-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் நாள் வியாழக் கிழமை மாலை 7-40 மணிக்கு நம்மை யெல்லாம் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்தார் தமிழ்த் தென்றலாம், தமிழ்ப் பெரியாராம், தமிழ்க் கடலாம், சுயமரியாதை அன்னையாம், சமதர்மச் சீலராம், மிதவாதக் குணக்குன்றும், பெண்மையின் உயிராம், தொழிற் சங்கத் தந்தையாம், நமதருமை **திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்.**

மங்காப் புகழ் பெற்ற மாமணியின் பூத உடல் மறைந்திடினும், புகழுடம்பு மறையுமோ? அப்புகழுடம்பு நமக்கெல்லாம் **மறையா மாமணி** யல்லவோ?

இவ்வவனி நின்று நிலவுமட்டும் நந்தமிழன்னை நடம்புரிந்த வண்ணமே இருப்பாள்! இது மெய்மையினும் மெய்மையன்றோ? அப்படிப்பட்டத் தமிழ் நிலைத்து தழைத்தோங்க ஓங்க, தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் புகழும் ஓங்கா நிற்கும்! அத்துணை தூரம் நம்மாமணி அவர்கள் தமிழை உயிர் கொடுத்து வளர்த்தாரல்லவா?

1912-ல் மணவாழ்க்கை எய்தினார், 1918-ல் வாழ்க்கைத் துணைவியை யிழந்தார்! அவ்வாறுண்டு வாழ்க்கையில் பிறந்த குழந்தைகளையும் இழந்து விட்டார்!

வேறு மணம் புரிய ஒப்பவில்லை, அவர் மனைவியின் மீது கொண்ட அன்பையும், குழந்தைகளின் மீது கொள்ள வேண்டிய அன்பு அத்தனையையும் தமிழின்பாலே செலுத்தலானார். தமிழ் நாட்டையே தமது இல்லமாகக் கொண்டார். தமிழ் மக்களனை வரையுமே தம் மக்களாகக் கொண்டார்!

அதிலிருந்து உடல், பொருள், ஆவி அனைத்தும் தமிழ், தமிழ்நாடு, தமிழர் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணித்து அரும் பாடுபட்டு 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவப் பெருமான் இலக்கியத்திற்கு நமது மாமணி இலக்கணமாகத் திகழ்ந்து புகழ் கொண்டார்.

காந்தியார் தமது தாய்மொழியான குஜராத்தி மீது கொண்ட பற்றை எடுத்துக் காட்டித் தமிழர்களை மொழிப்பற்று கொள்ளுமாறு வேண்டினார்.

திலகர் பெருமான் தமது தாய்மொழியாகிய மராட்டியர்மீது கொண்ட நீங்காப் பற்றை எடுத்து இயம்பி தமிழர்களையும் தமிழ்ப் பற்று ஏற்குமாறு தட்டி எழுப்பினார்.

வங்கச் சிங்கம் சித்தரஞ்சன் தாஸைப் போன்று தமிழர்களையும் தாய்மொழிப் பற்று பெறத் தூண்டினார்—நமது மாமணியாம் திரு. வி. க.

தாய்மொழிப் பற்று அவரிடம் எவ்வளவு மண்டிக் கிடந்தது என்பதற்கு அவரது மணி வாசகங்களே நற்சான்று பகரா நிற்கின்றன.

"நாட்டையும், மொழியையும் நேசியாதவன் பெற்ற தாயை நேசியாத பாவியாவான்" என்றார்.

மொழியினிடத்துப் பற்றில்லாதார் தேச சேவை, இடம்பத்தை அடிப்படையாகக் கொண்டதாக முடியுமென்றார்.

தமிழ்நாட்டில் திலகர் பெருமான், காந்தியடிகள் போன்ற தேசபக்தர்கள் தோன்றாமைக்குக் காரணம் தமிழர்களிடம் மொழிப் பற்று இன்மையே யாகும் என்று இடித்துரைத்தார்!

இவை போதாவோ. அவரது மொழிப் பற்றினைக் காண!

அவரது தமிழ், அழகு தமிழ்! நடை? வீறுநடை! உணர்ச்சி? அடேயப்பா வீரங் கொள் தமிழா! வீரங் கொள்! என்று படிப்போரைத் தட்டி யெழுப்பிய வண்ணமே யிருக்கும்! ஆதாரம்? எண்ணற்றவை அடங்கிக் கிடக்கும்! அன்பு? வழிந்தது வழிந்த படியே இருக்கும்! சொற்கள் அமைப்பு? இணையற்றதாய் அமைந்து விட்டது. இன்னொரு திரு. வி. க. பிறக்க வேண்டும் என்கிற அளவிற்கு திரு. வி. க. தமிழழகு, சொல்லழகு, நடையழகு, எல்லாம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து விட்டது. அது தமிழ் உள்ளளவும் மறையா வண்ணம் திகழ்ந்தே தீரும்!

அவர் எழுப்பிய தாய் மொழிப்பற்று முழக்கம் வீண்போகவில்லை.

இன்று எங்கும், எதிலும் தமிழ்! தமிழ்! தமிழ்! என்பதே பேச்சாகி விட்டது.

பள்ளிப் பாடமொழி—
தமிழ்! தமிழாகவே வேண்டும்!

ஆட்சி மொழி—தமிழ்
தமிழாகவே அமைய வேண்டும்!

மேடைப்பேச்சில்—தமிழ்
மணங்கமழவேண்டும்!

கோயிலிலும் அர்ச்சனை—
தமிழில்தான்!

ஆக தமிழ்த் தென்றல் திரு. வி. க. இட்ட விதை இன்று நல்லதொரு தமிழ்த் தருவாகத் தழைத்து நிழலளிக்க நம்மையெல்லாம் அழைக்கிறது! என்னே அவர்தம் சேவை!

மொழியை மட்டும்தான் பேணிவளர்த்தாரா திரு. வி. க!

இல்லை. சமுதாயம், பொருளாதாரம் அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலேயும் உண்மைக்கு உழைத்து அரும்பாடு பட்ட உத்தமர் ஆவார் அவர்!

காங்கிரசைக் கட்டி வளர்த்தார்!

சென்னை தொழிற் சங்கத்தைப் பெற்றெடுத்து கண்ணெனப் போற்றி வளர்த்தார்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளை சமன் செய்ய சமதர்மப் பணியாற்றினார்! நல்லுரை பகன்றார்!

சாதியின் கொடுமைகளைச் சாடினார்!


" குத்தீட்டி ஒரு புறத்தை குத்த வேண்டும்
கோடாரி ஓர் புறத்தைப் பிளக்க வேண்டும்."

**அக்டோபர் முதல்தேதி எங்கும் கிடைக்கும்!**

கொழுப்பெடுத்த பகைவரைத் தாக்கும்
மாத மிருமுறை

**சண்டமாருதம்**

**ஆசிரியர் : கலைஞர் செல்லப் பாண்டியன்**

**விலை ஒன்றரையணா**

ஏஜெண்டுகள் எழுதுக. முன்பணம்
கட்டுவோருக்கே இதழ் அனுப்பப்படும்

சண்டமாருதம்
**142, மவுண்ட்ரோடு, சென்னை-6**


கலப்புத்திருமண மருந்தைக் காட்டினா[ர்] சாதியை ஒழித்துக்கட்ட! இங்கே அவரது மணிவாசகத்தையே நினைவு கூறுவோம்: சாதி நோயின் வேரை அறவே கல்ல வல்ல மருந்து கலப்பு மணமே என்பது என் முடிவு! என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி னார்!

புராணங்களை விட்டாரா? "குப்பை என்று வழங்கப்படும் ஏட்டுச் சுவடிகளில் பேர் பெற்று விளங்குவன புராணங்கள் புராணங்கள்--தமிழ் நாட்டின் முதல் நூல் களல்ல! புராணங்கள் வேறு உலகினின் றும் நந்தமிழ் நாட்டிலே குடியேறினவை. **புராண மென்னுஞ் சொல்லே தமிழ்ச்சொல் லன்று!" என்றே கூறி விட்டாரே!**

பெண்ணையும் நாட்டையும் எவ்வளவு இணைத்துப் பேசினார் பாருங்கள்.

பெண்ணுலகின் நிலைகொண்டே ஒரு நாட்டின் நாகரீகத்தை அளந்து உணர வேண்டும், என்றார்.

பெண்ணின் பெருமையை எங்ஙனம் போற்றுகிறார் என்பதையுங் காணுங்கள் :

பெண் தெய்வங்களின் வேண்டுகோளை மறுக்க எந்தப் பாவிக்குத்தான் மனம் எழு[ம்]

பெண் இல்லையேல் உலகேது? உயி ரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணால்! எல்லாம் பெண்ணில்! அத்த கைய பெண்ணை — தாயை — தெய்வத்தை போற்றுங்கள்! போற்றுங்கள்! போற்றுங் கள்!—என்றார்.

அவர்தம் பொதுவாழ்வின் இறுதிக் கட் டத்தில் தென்னாடு தனித்தியங்க வேண்டு மென்ற கொள்கையையும் வலியுறுத்திக் கூறிவந்தார்.

அவர் முடிக்கும் சொற்களை மும்முறை கூறும் மறபுடையோர் என்பது அவரது தனிச் சிறப்பாகும்.

இப்படிப் பலவற்றாலும் தமது ஆற் றலை வெளிப்படுத்தி நாட்டிற்கும் நாட்டு மொழிக்கும், நாட்டு நாகரீகத்திற்கும் அரும் பணியாற்றிய தியாகச் சீலரை செந்தமிழ் நாவலரை, சமதர்மப் பாவலரை, பெண் ணுரிமைக் காவலரை தொழிலாளத் தந்தை யாரை, சுயமரியாதைத் தாயாரை, எங்ஙனம் எவரால் மறக்கவியலும்?

அவர் வளர்த்த தமிழைப் பருகுந்தோ றும், பருகுந்தோறும்: அவர் தன்னல மற்று மக்கட்கு ஆற்றிய அரும்பணியினை உன்னுந் தோறும், உன்னுந்தோறும். அவர் தோற்று வித்த சென்னை தொழிற் சங்கம் வளருந்தோ றும், வளருந்தோறும், திரு. வி. க. அவர்க ளின் நினைவு அலைகள் நம் உள்ளத்தை உராய்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கு மல்லவா?

அவர் தீட்டித் தந்த நூல்கள் கொஞ்ச மா? அவைகளை நாம் மட்டுமா படித்து நின்று விடுவோம்? வாழையடி வாழையா வரவிருக்கும் பின் சந்ததியார்களும் படித்து தென்றலின் சிலிர்ப்பை ஏற்றிப் போற்றத் தான் போகிறார்கள்! அவரது புகழுக்கு அழிவு ஏது அப்போது?

எனவே திரு. வி. க. தமிழுலகத்திற் கொரு **மறையா மாமணியன்றோ!** அம் மறையாமாமணி அவனியுள்ளளவும்நிலைத்து ஒளி வீசி ஓங்குவதாகுக!

★

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

# திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப் பித்தன்

## 29

லார்ட் கர்சான் கவர்னர்-ஜெனரலாக இருந்த காலத்தில் கல்வித்துறையில் மிகுதியான அளவிற்கு நாட்டம் செலுத்தப்பட்டது. 1901-ம் ஆண்டில் கர்சான் தன் சொந்த முயற்சியினுல் கல்வி மாநாடு ஒன்றைக் கூட்டினர், இம்மாநாட்டில் மக்கட் கல்வியின் பிற்போக்கு நிலைமையை தெளிவாக எடுத்துக் கூறி பொதுமக்களின் கல்வி அறிவை அதிகரிக்கச் செய்யும்படியான காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினுர். அவர் கூறிய யோசனையின் பயனுக மக்களிடையே துவக்கக் கல்வி வளர்ச்சி யடைவதற்கான ஏற்ற வழிவகைகள் வகுக்கப்பட்டன. மாகாண சர்க்கார்கள் இவைகளைக் கடைப் பிடித்து காரியமாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். துவக்கக் கல்வி மட்டுமல்லாது, உயர்தரக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் கூட வளர்ச்சி யடைய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து 1902 ஜனவரியில் பல்கலைக் கழக கமிஷன் ஒன்றை நியமித்தார் லார்ட் கர்சான், இக்கமிஷன் போற்றத் தக்க வகையில் தன் கடமையைச் செய்து நல்ல கருத்துக்களை தெரிவித்த தென்றுலும் நமது திராவிடத்தைப் பொறுத்தமட்டில் பாதகமே செய்தது எனக் கூறவேண்டியுள்ளது. அப்போது திருச்சி, திருவனந்தை, பங்களூர் ஆகிய இடங்களில் புதிய பல்கலைக்

## கோகலேயின் கட்டாய துவக்கக் கல்வி மசோதா

## லார்ட் கர்சானும் -- கல்வி வளர்ச்சியும்

கழகங்கள் துவக்குவதற்கான திட்டங்கள் தென்னுட்டு சர்க்காரிடையே இருந்துவந்தன. ஆனுல் இவ்விடங்களில் பல்கலைக் கழகங்கள் துவக்கப்படுதற்கான உரிய காலம் இன்னும் வரவில்லை என்று கமிஷன் தன கருத்தைத் தெரிவித்ததால் இவ்விடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுவது நின்றுவிட்டது. பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தைப் பற்றியும் அவைகளின் திறமையான கல்விப் பயிற்சியைப் பற்றியும் விரிவான சட்டங்கள் இயற்றப்பட்டதும் ஒவ்வொரு பல்கலைக் கழகமும் நல்ல முறையில் ஒரு புத்தகசாலை வைத்திருக்க வேண்டும் என சட்டம் இயற்றப் பட்டதும் குறிப்பிட வேண்டியதாகும்.

கர்சான் பிரபு இவைகளுடன் நின்று விடவில்லை. மற்ற மருத்துவம், என்ஜினியரிங், உழவு, காடு, கால்நடை விஞ்ஞானம் ஆகியத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும்படியான காரியங்களைச் செய்தார் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும். நாட்டின் பண்டைக் கால கட்டிடங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான "பண்டை நினைவுச்சின்ன பாதுகாப்புச் சட்டம்" (Ancient Monuments Preservation Aet) என்ற ஒரு சட்டம் ஏற்படுத்தினுர். சரித்திரப் புகழ்பெற்ற கட்டிடங்கள் யாவும் சர்க்கார் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டன, காப்பாற்றி வரப்பட்டன. மற்றும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவை விரிவுபடுத்தி அதற்கென டைரக்டர் ஜெனரல் (Director-General of Archaeology) ஒருவரை புதிதாக நியமித்தார். இக்காரியங்கள் யாவும் நம் பழமைச் சரித்திரத்தை தெரிந்து கொள்வதற்கான முயற்சிகளும் கல்விச் சீர்திருத்தக் காரியங்களுமாகும்.

1910-ம் ஆண்டில் வைசிராய் செயற் குழுவில் கல்வி அங்கத்தினர் ஒருவர் நியமிக்கப்பட்டது சர்க்கார் நிர்வாகத்தில் ஏற்பட்ட புதியதொரு மாறுதல் மட்டுமல்ல முன்னேற்றமான மாறுதலுமாகும்.

இக்காலத்தில் துவக்கக் கல்வியானது மக்களது கவனத்தை பெரும்பாலும் ஈர்த்தது: வடஇந்தியத் தலைவர்களில் தலைசிறந்தவரும் இந்திய ஊழியர் சங்க ஸ்தாபகருமான கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் துவக்கக் கல்வியைப் பற்றி இந்திய சட்ட சபையில் 1910-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ந் தேதி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார், அவருடைய தீர்மானமானது இந்திய மக்களுக்கு கட்டாய இலவசக் கல்வி உடனடியாக போதிக்கப்பட வேண்டும் எனக் கூறியது. துவக்கக் கல்வி பற்றிய இம்முற்போக்கான தீர்மானத்தை அகில இந்திய காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஆதரித்தனவென்றுலும் இந்திய அரசாங்கத்தினர் துவக்கக் கல்விக்கான துரிதமான காரியங்களை மேற்கொள்வதாக வாக்குறுதி கொடுத்ததினுல் கோகலே தமது தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி ஆகிவிட்டது;

ஆனுல் வாக்குறுதி செயலில் காட்டப்படாதுபோகவே மறுபடியும் கோகலே அவர்கள் இந்திய சட்ட சபையில் துவக்கக் கல்விப் பிரச்னையைக் கிளப்ப வேண்டியதாயிற்று இம்முறை தமது கருத்தை ஒரு மசோதா உருவில் சட்டசபையில் கொண்டு வந்து சட்டமாக்க முயன்றுர். கோகலேயின் இந்த மசோதா சட்டமாக்கப்பட்டிருந்தால் இன்று நாட்டு மக்கள் யாவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆகியிருப்பார்கள். ஆனுல் துரதிர்ஷ்டவசமாக கோகலேயின் மசோதா இந்திய சட்ட சபையில் தோற்கடிக்கப் பட்டுவிட்டது. இதே காலத்தில் சட்டமாக்கப்பட்ட 'இந்திய பாக்டரி மசோதா' விவாதத்தின் போதும் தொழிலதிபர்கள் தொழிலாளரின் மக்கட்கென தம் தொழிற்சாலைப் பகுதிகளில் துவக்கப் பள்ளிகள் நடத்தி வர வேண்டும் என ஒரு சட்டப் பிரிவு சேர்க்கப்பட வேண்டும் என கோகலேயும் சில அங்கத்தினர்களும் கோரினர், இந்திய பாக்டரி மசோதாவானது பெரும்பாலும் டாக்டர் டி. எம். நாயரின் கருத்துக்களை கொண்டிருந்தது என்பதும், துவக்கக் கல்வி யோசனையானது வரவேற்கத் தக்கதாயினும் தொழில் அபிவிருத்திக்குத் தடையாக ஏற்பட்டுவிடும் என்ற உண்மையை டாக்டர் டி. எம். நாயர் எடுத்துக் காட்டியதினுல் அந்த யோசனை கைவிடப்பட்டது என்பதும் நினைவு கூறத் தக்கதாகும்.

கோபால கிருஷ்ண கோகலேயின் மசோதா தோல்வியுற்றுலும், துவக்கக் கல்வியைப் பற்றி விசேஷ கவனம் செலுத்தும்படி ஏற்பட்டுவிட்டது இந்திய சர்க்காருக்கு. சர்க்கார் மட்டுமன்று 1911-ம் ஆண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்த ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் இந்திய மக்களின் கல்வி விஷயத்தில் அக்கரைக் காட்டிப் பேசும்படியும் ஆகிவிட்டது. இதன் பயனுக இந்திய சர்க்கார் சிறிது தாராளமாக செலவழித்து துவக்கக்கல்வி பரவுவதற்கு ஆவன செய்ய முன் வந்தனர். 1913-ம் ஆண்டு பிப்ரவரியில் இந்திய சர்க்கார் கல்வி விஷயமாக தமது திட்டம் ஒன்றை வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாகும். துவக்கக் கல்வி, உயர்

## மைசூர் -- உஸ்மானியா பல்கலைக் கழகம்

தரக் கல்வி, உத்தியோகக் கல்வி ஆகிய எல்லாக் கல்வி முறைகளின் வளர்ச்சிக்கும் ஆவன செய்யப்பட்டன.

இந்தக் காலத்தில் திராவிடத்தில் மேலும் இரு பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டது குறிப்பிட வேண்டியதாகும் 1916-ல் மைசூர் யூனிவர்சிட்டியும், 1918-ல் ஹைதாரபாத் யூனிவர்சிட்டியும், நிறுவப்பட்டன,

இரண்டே இரண்டு கல்லூரிகளுடன் துவக்கப்பட்ட மைசூர் பல்கலைக் கழகமானது இன்று சுமார் முப்பது கல்லூரிகளை உடையதாய் வளர்ந்துள்ளதும், பல்கலைக் கழக நிர்வாகம் முழுவதும் மைசூர் சர்க்காருடைய செலவிலேயே நடந்து வருவதும் குறிப்பிட வேண்டியதாகும். இப்பல்கலைக் கழகத்தின் கலைத் துறைப் பகுதியானது மைசூரிலும், பெங்களூரிலுமாக நடைபெறுகிறது. கல்லூரிகளில இன்டர்மீடியட் வகுப்பில் படிக்கும் எல்லா மாணவர்கட்கும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாய பாடமாக்கப் பட்டுள்ளது, இந்தப் பல்கலைக் கழகம் நிறுவப்படுதற்கு மைசூர் மகாராஜா எடுத்துக் கொண்ட முயற்சிப் பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

ஹைதராபாத் உயர்தரக் கல்வித் துறையானது சுமார் அரை நூற்றுண்டு காலத்திற்கு மேலாகவே சென்னை பல்கலைக் கழக இணைப்பின் கீழ் இருந்து வந்தது. ஹைதராபாத் சமஸ்தான கல்வித் துறைச் செயலாளராக வந்த சர் அக்பர்ஹைதாரி அவர்கள் 1917ல் ஹைதராபாத்திற்கென ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் படவேண்டியதின் ஒரு திட்டத்தை நைஜாமிடம் சமர்பித்தார், இது ஹைதராபாத்-தெக்கணப் பகுதிகளின் தேவையை நிறைவேற்றும் என்பதை எடுத்துக் காட்டினுர். மற்றப் பல்கலைக் கழகங்களில் பயிற்சி மொழி இருந்து வரும் ஆங்கில மொழியல்லாமல் ஹைதராபாத் ராஜ்ய மொழியான உருது மொழியே பயிற்சி மொழியாகவும் பரிட்சைக்குரிய மொழியாகவும் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினுர், அதே சமயத்தில் ஆங்கில மொழியிலும் தேவையான அளவிற்குப் பயிற்சிக் கொடுக்கப்பட்டு வர வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். இந்தத் திட்டப்படியே 1918-ம் ஆண்டில் உஸ்மானியா பல்கலைக் கழகம் (Osmania University) என்ற பெயரில் ஹைதராபாத்தில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது சென்ற எட்டு ஆண்டுகட்கு முன்னர்தான் ஹைதராபாத் நைசாம் கல்லூரி முதலியனயாவும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பினின்றும் பிரிந்தன.

**கல்விக் கூடங்கள் — மாணவர்கள்**

| கல்விக் கூடங்கள் விவரம் | 1911—1912 | | 1916—1917 | |
|---|---|---|---|---|
| | கல்விக் கூடங்கள் எண்ணிக்கை | மாணவர் தொகை | கல்விக் கூடங்கள் எண்ணிக்கை | மாணவர் தொகை |
| கலைக் கல்லூரிகள் | 30 | 4924 | 38 | 7759 |
| தொழிற் கல்லூரிகள் | 3 | 862 | 7 | 1655 |
| உயர்தரப் பள்ளிகள் | 375 | 102886 | 377 | 139796 |
| துவக்கப் பள்ளிகள் | 24044 | 940689 | 28881 | 1223182 |
| இதரப் பள்ளிகள் | 135 | 6405 | 222 | 19937 |
| கூடுதல் | 24587 | 1055766 | 29525 | 1392329 |

**கல்விக் கூடங்கள் — மாணவிகள்**

| கல்விக் கூடங்கள் விவரம் | 1911—1912 கல்விக் கூடங்கள் எண்ணிக்கை | 1911—1912 மாணவர் தொகை | 1916—1917 கல்விக் கூடங்கள் எண்ணிக்கை | 1916—1917 மாணவர் தொகை |
|---|---|---|---|---|
| கலைக் கல்லூரிகள் | 2 | 15 | 3 | 151 |
| பயிற்சிக் கல்லூரிகள் | — | — | — | — |
| உயர்தரப் பள்ளிகள் | 65 | 7450 | 72 | 10096 |
| துவக்கப் பள்ளிகள் | 1162 | 88361 | 1692 | 133639 |
| இதரப் பள்ளிகள் | 43 | 1294 | 48 | 1824 |
| கூடுதல் | 1272 | 97120 | 1815 | 145710 |

துவக்கப் பள்ளிகளும் சரி, உயர்தரக் கல்விக் கூடங்களும் சரி இந்தக் காலத்தில் முன்னேற்றப் பாதையை நோக்கி வளர்ந்து வந்தன. மேற்கண்ட புள்ளி விவரங்கள் இவ்வுண்மையைக் கூறுவனவாகும்.

இவைகளுக்கான செலவும் மேற்கண்ட காலத்தில் அதிகரித்தே வந்துள்ளன. 1911—12-ம் ஆண்டில் செலவான 1,35,65,102 ரூபாயானது 1916—17-ம் ஆண்டில் 2,16,87,896 ஆக உயர்ந்துவிட்டது.

இவ்விவரங்களுடன் தொழில் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்ட விவரமும் கூறவேண்டியதாகும். 1915-ம் ஆண்டில் தோல்தொழில் இன்ஸ்டிட்யூட் (Leather Trade Institute) ஒன்றும்

8-ம் பக்கம் பார்க்க

# திராவிடன்

சென்னை : 16-9-55 : வெள்ளி


## ஏழாம் ஆண்டு

## நமது மகத்தான தொண்டு.

புத்தாண்டு பிறக்கிறது—திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு. ஆறு ஆண்டுகளாக ஏறுநடை போட்டு இன்று ஏழாவது ஆண்டை எறிட்டுப் பார்க்கிறது. ஏழாம் ஆண்டு தி. மு. கழகப் பணிக்குப் புத்தாண்டு.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி கடந்த ஆறு ஆண்டுகளாக நாட்டிலே அது ஆற்றி வந்துள்ள மகத்தான பணி—நாட்டு மக்களிடை ஒரு நல்ல மதிப்பை ஏற்படுத்தி வைத்துள்ளது. அதுமட்டுமல்ல, நம்முடைய தூய்மையான தொண்டு—அரசியலாருக்கு நமது வலிவையும் பொலிவையும் எடுத்துக்காட்டியிருக்கிறது. நாட்டு மக்களின் உடனடித் தேவைகளைக் கவனித்து அதற்குப் பரிகாரம்அளிக்க உண்மையான ஒரு இயக்கம் தென்னகத்தில்—திராவிடத்தில் இருக்கிறது என்றால்—அது திராவிடமுன்னேற்றக் கழகம்தான் என்பதை நமது ஆறு ஆண்டு காலத் தொண்டு நிரூபித்திருக்கிறதென்று கூறினாலும் தற்புகழ்ச்சி யாகாது.

நம்முடைய கழகம் தனித்தியங்கத் துவங்கிய காலை, நமக்கென தனிக்கொடி—நமக்கென ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு—இவையெல்லாவற்றிற்கும் மேலாக நமது அண்ணா அவர்களின் தலைமை ஆகிய இவைகளுடன் நாம் நாட்டிலே விடுதலை முழக்கத்தை ஒலிக்கத் துவங்கியபோது, இவர்களால் என்ன சாதிக்க முடியும், அனுபவமற்றதுகள், பிஞ்சிலே பழுத்ததுகள், சிறுபிள்ளைகள், பள்ளிக்கூடத்துப் பையன்கள்—இவர்கள் பேச்சை யார் கேட்பார்கள், என்றெல்லாம் ஏளனம் செய்து நின்றோர் ஏராளம்!

கையிலே காசுயில்லை—கடன் கொடுப்பார் யாருமில்லை என்ற நிலையில் நாம் வெளியேறிய போது—கண்ணீர்த் துளிகளை சிந்த விட்டுக் கொண்டே. தனிக் கழகம் கண்ட நாளில்—இதுகளிடம் என்ன இருக்கிறது, இதுகள் பட்டுப் போகும்—என்று நாட்டில் உள்ள 'பலரகப்பட்டவர்கள்' பரிகசித்தனர்.

இவ்வளவு ஏளனங்களையும், இழி சொற்களையும் தாங்கிக் கொண்டும், நமக்கு ஏற்பட்ட சோதனைகளில் வெற்றி கண்டும், தரப்பட்ட வேதனைகளை சகித்துக் கொண்டும் நாம் ஆறு ஆண்டுகளை மகத்தான வெற்றியுடன் கழித்திருக்கிறோம். நம்முடைய வெற்றிப் பட்டியலைப் பாக்கும்போது—நம்உள்ளம் பரவசமடைகிறது—களிப்பிலாடும் கானமயிலாகிறது.

"அன்னக்காவடிகளாக" இருந்த நாம் இன்று ஒரு தினசரிப் பத்திரிகை—ஒரு அச்சகம் சொந்தத்தில்—ஒரு மாளிகை—ஒரு திடல் இவ்வளவு வசதிகளையும் எப்படிப் பெற முடிந்தது ?

யாராவது மாளிகை வாசிகளிடம் சென்று கண்ணைக் காட்டியோ கருத்தினை அடகு வைத்தோவா பெற்றோம் ?

அல்லது கொள்கையை விட்டுக் கொடுத்து அதற்கு பேரமாக இவைகளைப் பெற்றோமா ?

இல்லை! நமது கொள்கைகள்! நமது தூய்மையான தொண்டு! நமது மகத்தான டணி!—இவைகள் நாட்டு மக்களிடையே நம்மைப் பற்றி ஏற்படுத்தித் தந்த நன்மதிப்பு—அந்த நன்மதிப்பு அளித்த பரிசுகள்தான் மேலே கண்டுள்ள பட்டியல்.

மாளிகையையும்— நாளிதழையும் வைத்துக்கொண்டு நாம் கடந்த சில ஆண்டுகளில் மந்தகாச வாழ்வா நடாத்திக் கொண்டிருந்தோம். அல்ல! அல்ல!

நாட்டிலே உள்ள மற்ற சில முகாம்கள்—நாங்களும் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்வதற்காக அடிக்கடி போராட்டம் என்ற பெயரால் நடத்துகிறார்களே திருவிளையாடல்கள்—அதைப் போன்று அல்ல, இந்த நாட்டு மக்களின் பிரச்னைகளைக் கவனிக்க—நாட்டு விடுதலைக்கு வழிகாண—மக்களின் வாழ்வைக் காக்க நாம் நடத்திய மும்முனைப் போராட்டம் நமது கழகத்தின் முதுகெலும்பாக மாறியிருக்கிறது!

ஐயாயிரம் பேர் சிறையில் — தடியடி—கண்ணீர்ப்புகை—துப்பாக்கிப் பிரயோகம்—இவ்வளவுக்கும் மேலாக சதிவழக்குகள்—இவ்வளவும் நம்மீது சுமத்தப்பட்டன—தாங்கிக் கொண்டோம்.

வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டம் ஒழிந்தது—நேரு பண்டிதரின் காத்தழும்பேறிய பேச்சுக்கு அறிவு புகட்டினோம். கல்லக்குடிதான் இப்போதும் அங்கே காட்சி தருகிறது. ஆனால் அரசியலாருக்கு மட்டும் இன்னும் இந்தப் பிரச்சினையில் தெளிவு பிறக்கவில்லை!

ஈருங்கக்கூறின் நாம் நடத்திக்காட்டிய மும்முனைப்போராட்டம் டெல்லி தேவதைகளைத் திகைக்க வைத்திருக்கிறது--அது மட்டுமல்ல சிலர் நம்முடைய ஆதரவினையும் வேண்டுகின்றனர் தங்கள் காரியங்களுக்காக!

இவை மட்டுமா? இந்த நாட்டில் பிறந்தும் வாழ வகைபற்று தேம்பி அழுதனரே நம் கைத்தறியாளர்கள்—அவர்களைத் தேற்றுவதற்கு துரைத்தனத்தாருக்கு நேரமிருக்க வில்லை. கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைத்து—தோளிலே துணி சுமந்து விற்று அவர்களது துயர் தீர்த்து நின்றவர்கள் நாம்தான் !

திருச்சியிலும் தஞ்சையிலும் விசியடித்ததே புயல், வீடுகள் சரிந்து, வீதிகள் பாழாகி திருச்சி, தஞ்சை மக்கள் திகைத்து நின்ற நேரத்திலும் நாம்தான் புயல் நிவாரணத்திற்கு பெருநிதி திரட்டித் தந்தோம்,

ஐந்தாண்டுத் திட்டம்—அதிலே நமக்கிழைக்கப்படும் அநீதி—இவைகளையும் தி.மு. கழகம் எடுத்துக்கூறிய பின்னர்தான்—மாற்றுக் கட்சியினரும் உணரத் தலைப்பட்டனர்—கண்டிக்கவும் செய்தனர். இவ்வளவு காரியங்களையும் நாம் பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே செய்து முடித்திருக்கிறோம்—நாம் பறிகொடுத்த வீரர்களை நினைத்தால் நெஞ்சம் திடுக்கிடுகிறது.

இவைகள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைப்பது போன்று நம்முடைய ஜனநாயக வளர்ச்சி. எங்கும் நமது இனமுழக்கம்! கடல் கடந்து பரவியிருக்கும் நம்முடைய கழகத் தோழர்கள்! கல்லூரியிலும் பள்ளியிலும் கொள்கை முழக்கம் செய்யும் காளைகள்! இவர்கள் அனைவருடைய ஆதரவுடனும் நாம் நடாத்திக் காட்டிய 25 க்கு மேற்பட்ட மாவட்ட மாநாடுகள்! பத்துக்கு மேற்பட்ட பொது மாநாடுகள்! மாபெரும் முதல் மாநில மாநாடு! இவைகளை எழுத எழுத இதயம் கனத்துக்கொண்டே செல்கிறது! களிப்பில் கூத்தாடுகிறது!

இவைகளை அடிப்படையாக வைத்து திருச்சியில் நடக்க இருக்கும் மாநிலமாநாடு—அங்கு தீட்டப்படயிருக்கும் திட்டங்கள்—பெற இருக்கும் அரசியல் அறிவுரைகள், இவைகளுக் கெல்லாம் ஏழாம் ஆண்டு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

இவ்வளவு வெற்றிகளையும்—வீரர்கள் பட்டியலையும் நாம் வைத்துக் கொண்டிருக்கும் போது நம்மைப்பற்றி எண்ணுங்கால்—இலங்கைத் தமிழர் நிலை நினைக்குங்கால்—வேறு மாநிலங்களில் வதியும் திராவிடர்களைப் பற்றி சிந்திக்குங்கால் நம்முடைய விடுதலை உணர்ச்சி வீறிட்டெழுகிறது.

இன்னும் எத்தனை நாளைக்கு நாம் அடிமைகளாக இருப்பது! அடிமைத்தளை அறுபட வேண்டாமா? விடுதலைக் கொடியை உயர்த்திப் பிடிக்க வேண்டாமா? என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை யளிப்பதுதான் நமது இரண்டவாது மாநில மாநாடு. எனவே நமது ஏழாவது ஆண்டுப் பணி—மற்ற ஆறுண்டுகளைக் காட்டிலும் சிறந்து விளங்கவும்—நமது இரண்டாவது மாநில மாநாடு வெற்றிகரமாக நடைபெறவும் நாம் அனைவரும் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையுடன், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு இம்மூன்றையும் நம்கழகத்தின் கண்களெனக்கொண்டு பணியாற்றவும் இந்த ஏழாம் ஆண்டுத் துவக்கத்தில் நாம் உறுதி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்!

வாழ்க திராவிடம்! வளர்க தி. மு. கழகம்!

## திராவிட நாட்டுப் பிரிவினை வார நிகழ்ச்சி

### பம்பாய்

18-9-56 ஞாயிறு மாலை 6மணிக்கு தாராவி தி. மு. க. சார்பில் குடிஅரசு நிலையத்தில் தோழர் ஆரியசங்காரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ந. ந: பாலையா, எஸ். தங்கையா, மாடசாமி, சு. தே. இராசையா, மா. அண்ணாமலை, ரெத்தினசாமி, எஸ். தியாகராசன் பேசுவர்.

### பெங்களூர்

18—9—55 மாலை 3-30 மணிக்கு தோழர் எஸ். வி. பதி தலைமையில் சர். புட்டண்ணாச் செட்டி டவுன் மண்டபத்தில் நாட்டுப் பிரிவினைவார நிகழ்ச்சியும் சிறப்புக் கூட்டமும் நடைபெறும். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், எ. டி. பிரான்சிஸ் பி.எஸ். ஸி. பேசுவர். இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசையும் நடைபெறும். நன்கொடை ரூ. 1 அணா 12—8.

### சென்னை புயளிந்தோப்பு

18-வது வட்ட தி. மு. க. சார்பில், 18-9-55 ஞாயிறு காலை 9-மணிக்கு பி. & சி. மில் அடுத்த புளியந்தோப்பு பார்த்தசாரதிநாயுடு தெருவில், தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் தோழர். எஸ். சிவானந்தம் கழகக் கொடியை ஏற்றி வைப்பார். அண்மையில் சென்னையில் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு (டேப் ரிகார்ட்) ஒலிபரப்பப் படும்.

### மதுரை

மதுரை நகர தி. மு. கழக சார்பில் 18—9—55 ஞாயிறு காலை 9 மணி முதல் 1 மணி வரை நகரின் முக்கிய பகுதிகளில் கழகக் கொடிகள் ஏற்றி வைக்கப்படும். மாலை 5 மணிக்கு நகர் கழகத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு வைகையாறு ஜின்னா திடலை அடையும். மாலை 7 மணிக்கு அவ்விடம் நடக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கவிஞர் எம். எஸ் ராமசாமி, எஸ். முத்து பேசுவர். இரவு 10-30 மணிக்கு நகர் கழகத்தின் முன்பாக பி. எஸ். செல்வா குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

### திண்டுக்கல்

18-9-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு வ. உ. சி. திடலில் நடைபெறும் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் பேசுவார்.

### காங்கயம்

19-9-55 திங்கள் மாலை 6—மணிக்கு மதார்சா சாயபு பேட்டையில் தோழர் எம் வேலுசாமி தலைமையில் நடைபெறும். அதுசமயம் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்

### பெத்துநாயகன் பேட்டை

19-9-55 மாலை 6மணிக்கு காசிவிசுவநாதர் கோயில் திடலில் சி. எஸ். கணேசன் தலைமையில் நடைபெறும், தோழர் சி. பி. சிற்றரசு, சி. ஆர். பாலசுந்தரம் பேசுவர்.

# தாய்மொழியை, புறக்கணிக்கும் 'தர்பார் சுந்தரர்' களுக்கு

# அறிஞர் அண்ணா

## அவர்களின் அறிவுரை

சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழா 7—9—55 புதன் மாலை 5-மணி யளவில் நடைபெற்றது. விழாவிற்கு மாணவர் தலைவர் ஞானசம்பந்தன் தலைமை வகித்தார்.

ஆசிரியத் தலைவர் கோபாலகிருஷ்ணன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

### திரு. நாரண துரைக்கண்ணன்

'பிரசண்ட விகடன்' ஆசிரியர் தோழர் நாரண-துரைக்கண்ணன் அவர்கள் தமிழ் மன்றத்தைத் துவக்கி வைத்துப் பேசியதாவது :—

நான் இன்று இவ்விழாவில் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டதற்கு முக்கிய காரணம் அறிஞர் அண்ணா அவர்கள் வருகிறார், அவரின் சொற்பொழிவினைக் கேட்க வேண்டும் என்பதேயாகும். சட்டக் கல்லூரியில் தமிழ் மன்றம் அமையப்பெற்று இயங்குவது நமக்கு ஆச்சரியமாகத் தானிருக்கிறது. ஏனெனில் அந்த அளவுக்கு நம் தாய்மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது. சட்டக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெறும் நீங்கள் எதிர்காலத்தில் நாட்டை ஆளவேண்டிய அல்லது அதற்குப் பெருந்துணையாய் நின்று பணியாற்றக் கூடிய பொறுப்பையேற்கக் கூடியவர்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனெனில் இன்று நம் நாட்டு அரசியல் துறையிலும் பொதுவாழ்விலும் மிகப் பிரமாதமாகப் பெயர் எடுத்து சிறப்புற்று விளங்கியவர்கள், விளங்கி வருபவர்களில் பெரும்பாலோர் வழக்கறிஞர்களேயாகும். சர் எ. ராமசாமி முதலியார், ராஜகோபாலாச்சாரியார், போன்றவர்களும் காலஞ் சென்ற சத்தியமூர்த்தி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்றவர்களுமே இதற்கு உதாரணமாகும். இந்தியாவில் மட்டுமின்றி அகில உலகிலும் இவர்களின் அறிவாற்றல் புகழப்படுகிறது.

அதுபோன்ற சிறப்பினைப் பெற வேண்டிய நீங்கள் கல்வித்துறையில் பெரிதும் ஊக்கம் காட்ட வேண்டும். எளிய வாழ்க்கையைக் கையாள வேண்டும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகியவைகளில் கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும். இவ்வித ஆக்கப் பணியினை தமிழ் மன்றம் மூலம் நீங்கள் பெறவேண்டும் என்றுகூறி எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

●

பின், அறிஞர் அண்ணா அவர்கள் விழாவில் அரியதோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அன்புள்ள தலைவரவர்களே, தோழர்களே !

இன்றைய நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வது பற்றி பெருமகிழ்ச்சி யடைகிறேன், இதற்கு முக்கிய காரணம் எனது நண்பர் நாரணதுரைக்கண்ணன் அவர்களும் இவ்விழாவிற்கு அழைக்கப்படயிருக்கிறார் என்பதை அறிந்ததேயாகும். அவரையும் இவ்விழாவிற்கு அழைக்கயிருக்கிறோம். என உங்கள்மன்றத்தலைவர் என்னிடம்கூறியபோது மனமார நானும் விரும்பினேன். நண்பர் நாரணதுரைக்கண்ணன் அவர்களை நேரில் சந்தித்து நீண்ட நாட்களாகி விட்டன என்பதுடன் அவருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு ஒரு சில இருப்பினும் பொது அவையில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்ற பண்பினை நன்கு உணர்ந்தவர். ஏறத்தாழ என்னைப்போலவே விட்டுக்கொடுக்கும் சுபாவமுடையவர்.

நண்பர் நாரணதுரைக் கண்ணன் அவர்கள், மிழுக்கும் தமிழகத்திற்கும் தன்னுலியன்ற வரை நற்பணியாற்றி வருகிறார். அவர் கூறிய அறிவுரைகளை மாணவர்களாகிய நீங்கள் மனதிலிருத்தி பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக இன்றுகல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்கள் தமிழ் மன்றங்கள் துவக்கினால், பேராசிரியர்களும்— ஆசிரியர்களும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர்;

துவக்கப்படுகின்ற தமிழ் மன்றங்களினால், மாணவர்கள் எந்த வகையால் பாதிக்கப்பட்டுவிடுவர் என்று அவர்கள் கருதுகின்றனரோ தெரியவில்லை;

ஆங்கில நாட்டில் ஆங்கிலத்திற்கும், ஜெர்மன் நாட்டில் ஜெர்மன் மொழிக்கும், பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சு மொழிக்கும் தனிக் கழகங்கள்—மன்றங்கள் இல்லை; அந்தந்த நாடுகளில் வேறுவேறு மொழிகளின் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்குமாகக் கழகங்கள் இருக்கலாம்; ஆனால் தமிழ் நாட்டில் தாய் மொழியான தமிழ் மொழிக்குத் தனிக்கழகங்கள், மன்றங்கள் துவக்கப்படுகின்றன;

மேலைநாடுகளில் தாய் மொழிக்கென தாய் நாட்டில் தனிக் கழகங்கள் இல்லை; ஆனால். இங்கு மட்டும் தனிக் கழகங்கள், மன்றங்கள் தோன்ற வேண்டிய அவசியமிருக்கின்றது; என்ன காரணம்!

அந்தந்த நாடுகளில், அவரவர் தாய் மொழிகள் ஆட்சி மொழியாக வீற்றிருக்கின்றன; அவற்றிற்கு, ஏற்றமும், இடமும், மதிப்பும் எல்லாத் துறைகளிலும் தரப்படுகின்றன; நமது நாட்டில், தமிழ் மொழிக்கு அந்த ஏற்றமும், இடமும் எந்தத் துறையிலும் இன்று கிடைக்கவில்லை;

நமது தாய்மொழியான தமிழுக்கு நமதுஆட்சி பீடத்தில் இடம் இல்லை—மதிப்பில்லை—என்ற நிலை நாட்டில் இருப்பதால், மாணவர்கள் தங்கள் தமிழ் மன்றங்களைப் பற்றியும் அவற்றின் நடைமுறைகளைப் பற்றியும். கல்லூரிகளில் அவைகளுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்பதைப் பற்றியும் கவலைப்படும்போது, மனதில் கொள்ள வேண்டியதெல்லாம் பொதுவாகவே, தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கு உரிய இடம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பது தான்.

நீதிமன்றங்களில் வழக்காடுதல் போன்ற காரியங்களுக்கு தமிழ் உபயோகப்படுத்தப் படுவதில்லை. ஆங்கிலத்தையே உபயோகப் படுத்துகிறார்கள். 'ஆங்கில மொழிதான் அந்தக் காரியங்களுக்குப் பயன்படும்—தமிழ் மொழி பயன்பட முடியாது என்பதல்ல,' இந்த நிலைக்குக் காரணம்.

ஆங்கில மொழியையே உபயோகிப்பதற்குக் காரணமாக எனக்குத் தெரிவதெல்லாம், மூன்று— தமிழ்மொழியில், சட்டநுணுக்க, தொழில்நுணுக்க் சொற்கள் இல்லை என்று கூறுவது, இரண்டாவது ஆங்கிலத்தில் பேசுவதுதான் பெருமதிப்பு என்ற பழக்க வாயிலாக எண்ணுவது, மூன்றாவது தங்களுக்குள்ள ஆங்கில அறிவைக் காட்டும் பிறருக்கு இருக்கும் ஆங்கில அறிவு குறைவு என்பதைக் காட்டுவதும்தான்,

இந்தக் காரணங்களை எண்ணிப் பார்த்தால் 'நமது தாய் மொழி தமிழில் காரியங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உண்டா—இல்லையா என்பது தெரியவரும்.

தமிழ்மொழியில், இப்போது வளர்ந்திருக்கிற விஞ்ஞானக் கலைக்கும் சட்ட திட்டங்களுக்கும் ஏற்ற நுணுக்கச் சொற்கள் உருவாக்கப்படவில்லை—என்பதுதான் உண்மையே அன்றி, உருவாக்கப்படவே முடியாது என்பதல்ல;

அண்மையில் சென்னை மந்திரி ஒருவர், திருச்சி மாவட்டத்தில் சர்க்கார் அலுவல்களை தமிழ் மொழியில் நடத்தினோம், அது வெற்றி பெறவில்லை; உதாரணமாக, திருச்சியிலிருந்து வேறு ஒரு அலுவலகத்திற்கு எழுதப்பட்ட கடிதம், சுத்தத் தமிழ் மொழியில் இருந்ததால், கடிதம், போய்ச் சேரவேண்டிய இடத்திற்குச் செல்லாமல், பட்டுவாடா செய்ய முடியாத அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. என்று தெரிவித் திருக்கிறார்.

சுத்தத் தமிழில் எழுதப்பட்ட ஒரு கடிதம்; சேரவேண்டிய இடத்திற்குப் போய் சேரவில்லை என்பதாலேயே, தமிழ்மொழியில் அலுவல்கள் நடைபெற முடியாதென்பதல்ல; ஒரு மாவட்டத்திலுள்ள அலுவலகங்களில் தமிழ் மொழியை அலுவலக மொழியாக ஆக்கிய சர்க்கார், அந்த மாவட்ட அலுவலகங்கள் தொடர்பு கொள்ளுகிற எல்லா அதிகாரிகளுக்கும், அலுவலகங்களுக்கும், தமிழ் மொழி அலுவல் நடைமுறை குறித்து போதுமான விளக்கம் தர ஏற்பாடு செய்யவேண்டிய பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு 'தமிழ் மொழியில் எழுதப்பட்ட கடிதம் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரவில்லை' என்று சாக்குக் கூறி 'தமிழ் மொழியில் அலுவல் நடத்தும் முறை வெற்றி பெறவில்லை' என்று கூறுவது பொருத்தமாகாது;

தமிழ் மொழி இன்று, ஆட்சி மொழியாக இருக்கவில்லை; ஆலயங்களில் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை தமிழ் மொழியில் நடை பெறவில்லை; அற மன்றங்களில், மருத்துவ விடுதிகளில், பொது அலுவலகங்களில், சடங்குகளில். சட்ட மன்றங்களில் தமிழ் மொழி இடம் பெற்றிருக்கவில்லை;

ஆலயங்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெற வேண்டும்—என்று பக்தர்கள் கோருகின்றனர்; ஆனால், ஆண்டவனுக்குத் தமிழ் மொழியில் அர்ச்சித்தால் புரியாது என்று கூறி, ஆண்டவனையே குறைத்துக்கூற முற்படுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அர்ச்சனையும், சடங்குகளும் இன்று சமமொழியிலேயே நடைபெற்றுவரவும் கூடும்; ஏனெனில், அந்த மொழிதான் சிறந்த மொழி என்று கூறுகின்றனர்.

ஆண்டவனை பூஜிக்கவோ, அல்லது சடங்குகளை நடத்தவோ, அல்லது ஆட்சி மொழியாக வீற்றிருக்கவோ சமமொழி சிறந்ததா — தமிழ் மொழி சிறந்ததா—என்பதை நான் இங்கு பேசிக் கொண்டிருக்கப்போவதில்லை; நீங்களும் எடை போட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்கப்போவதில்லை; எந்த மொழி சிறந்தது என்பதை, காலம் எடை போட்டுச் சொல்லவிருக்கிறது; காலத்தின் அந்த முடிவுக்காக, கண்ணியவான்கள் காத்துக் கிடக்கின்றனர்.

ஆனால், நமது தாய் மொழி அதற்குரிய இடத்தை ஆட்சியிலும், சட்ட மன்றத்திலும், நீதிமன்றத்திலும், இன்ன பிற இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் பெறுவதற்கான முயற்சியில், பட்டம் பெற்று கல்லூரிகளைவிட்டு வெளியேறிவிட்ட பிறகேனும் மாணவர்கள் பெரு முயற்சி செய்ய வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில், ஒரு புறம் இந்தத் தமிழ் உணர்வு கொழுந்துவிட்டெரிகிறது. தமிழ் மொழியில் அழகுறப் பேசும் சொற்பொழிவாளர்கள் திறம்பட—நயம்பட எழுதும் எழுத்தாளர்கள் உணர்ச்சியும்—பொருளும் மிகுந்த கவிதை இயற்றும் கவிஞர்கள் இருக்கிறார்கள்; நாள்தோறும் தமிழ் வளர்ச்சிக்குப் பல வழியிலும் பாடுபடுவோர் தொகை ஓர் புறம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

ஆனால், மற்றோர்புறத்தில், தமிழ் மொழியின் தொன்மையை — மேன்மையை வளமையை— சிறப்பை மறுக்காமல், எதிர்க்காமல் வேறு ஒரு மொழிமீது தழுவல் நடத்துகிறார்கள் — தமிழை நழுவ விடுகிறார்கள்.

ஆட்சிபீடத்திலிருப்போர் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. 'தமிழ் எல்லா வகையிலும் சிறந்தது' என்று ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், தமிழ் மொழிக்கு உரியஇடந்தராது, வேறுஒருமொழியின் வளர்ச்சிக்கு அக்கரை காட்ட முற்படுகின்றனர்.

'நல்லது ஒன்றை நம்மிடம் வைத்துக்கொண்டு மற்றொன்றைத் தழுவுவது, நம்மிடமிருப்பதை நழுவ விடுவதாகத்தான் முடியும், எனவே, மாணவர்கள் பொதுவாக நம்நாட்டில் தமிழ்மொழி ஏற்றமும்; இடமும் பெற்றில்லாததை மனதில் கொண்டு, தங்கள் காலத்திலேயே தாய் மொழிக்கு உரிய இடம் தேடித்தர முனைய வேண்டும்.'

பெருந் தலைவர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னால் 'ஒரு நாட்டின் மொழி அந்த நாட்டில் உள்ள கலாச்சாரத்தை எடுத்துச் சொல்வதற்குரிய கருவிதான்' என்று பேசியிருக்கிறார்.

பல வர்ண சித்திரங்கள் தீட்டப்பட்டு விளங்குகிறது ஒரு பானை, அது களிமண்ணால் செய்யப்பட்டது. 'களி மண்ணினால்தான் பானை செய்யப்பட்டிருக்கிறது' என்பதற்குப் பதிலாக, 'பானையின் அழகுத் தோற்றத்தையும் உருவத்தையும் சொல்வதற்குத்தான் களி மண் இருக்கிறது' என்றால் என்ன பொருள் அதற்கு!

பண்பாடு, நாகரீகம் என்பது மொழியின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். அந்த உண்மையை மறைத்துவிட்டு, 'பண்பாட்டை எடுத்துச் சொல்வதற்காக மொழி இருக்கிறது' என்பது எப்படி நியாயமாகும்?

மொழி வளருகிறது. பண்பாடும் அதற்கொப்ப வளருகிறது என்பதை மனித சமூக வரலாற்றில் நன்கு காணலாம்.

# நாங்கள் ஈடுபட்டுள்ள ஒரு வழக்கு : நீண்ட காலமாக முடிவு பெருதிருக்கிறது!

பூந்தோட்டம் என்பது நிலத்தைப் பண்படுத்தி நல்ல பல பூச்செடிகளைப் பாதுகாப்புடன், வளர்த்த பிறகுதான் உருவாக முடியும். அதுதான் உண்மையான பூந்தோட்டமாகவும் இருக்க முடியும். பூந்தோட்டமொன்றிலிருந்து மலர்களைப் பறித்துவந்து வேருெரு தரையில் அந்த மலர்களைப் பரப்பி வைத்துவிட்டு இதுதான் பூந்தோட்டம் என்று கூறுவது பொய்யுரையாகும்.

அதேபோல பண்பாடு, மொழி வழியாகத்தான் வருகிறது.

இந்த உண்மையை அந்தப் பெருந்தலைவர், 'உணராதவர்' என்பதல்ல, உணர்ந்தும் அவர் வீற்றிருக்கிற பெரிய இடம் அவரை உண்மையைக் கூருமல் தடுத்து விட்டது மட்டுமின்றி, அந்த உண்மையையே திரித்துக் கூறவும் செய்திருக்கிறது. என்ன செய்வது! எல்லாம் 'பெரிய இடம்' தந்த அருள், 'எத்தனை பெரிய தவறையும் துணிந்து செய்யத் தூண்டும் பெரிய இடமே நீ வாழி' என்று கூறுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்!

தமிழர்களுக்கு அவர்களுக்கென ஒரு மொழி உண்டு. அந்த மொழிவழி வளர்ந்த பண்பாடு உண்டு. பண்பாடு என்பது, வாழ்க்கை வழியாகும். பண்பு என்பது மக்களிடையே காலத்தால் உருவாக்கப்படும் வாழ்வு முறையாகும்.

'தமிழர்களின் வாழ்வு முறை, வாழக்கை வழி, பண்பாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஓங்கி வளர்ந்து வந்துளள ஒன்ருகும்.

தமிழர்கள், தங்களது ஓங்கி வளர்ந்துள்ள பண்பாட்டினையும், அந்தப் பண்பாடு வளரும் வழியான மொழியையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமான ஒன்ருகும்.

வேருெரு பண்பாட்டையும், மொழியையும் ஏற்றுக் கொள்வதானல் ஏற்கனவே நாம் கொண்டுள்ள தமிழர் பண்பாடு ஒருபுறத்தில் அழியும், மொழி மற்ருெருபுறத்தில் அழியும்.

மேலும் எந்த ஒரு பண்பாடும், காலத்தின் கருத்தை ஒத்து வளர்க்கப்படாவிட்டால் நாளாவட்டத்தில் பட்டுப்போகும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. கால மாற்றத்திற்கொப்ப வளர்ந்துவரும் வேறு பல பண்பாடுகளின் சிறப்பான தேவையான நல்ல அம்சங்களையும் உள்ளடக்கிக் கொண்டு ஒவ்வொரு பண்பாடும் காலத்தோடு ஒத்துவருமாறு வளர்க்கப்பட்டால், நீடித்து, நிலைத்து பெருமை தேடித்தர வல்லதாயிருக்க முடியும்.

நாம் நமது தமிழர் பண்பாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறி, அந்தப் பண்பாடு இன்று வளர்ந்துள்ள காலத்தின் கருத்திற்கொப்ப வளர்க்கப்பட்டு தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிருேம். ஒரு பழம் பெரும் சிறப்பு வாய்ந்த தனிப் பெரும் பண்பாடு வளர்க்கப்பட வேண்டுமென்று நாம் கூறும்போது சிலர் வேறு ஒரு பண்பாடு அழிந்துபடும் என்று அஞ்சுகிருர்கள்.

ஒரு பண்பாடு மற்ருெரு பண்பாடு வளருவதினுல் அழிந்துபடும் என்று கூறினுல் 'அழிந்துபடும்' என்று கருதப்படுகிற பண்பாடு தனித்து நின்று வளர்வதற்குரிய அம்சங்களற்றது என்று பொருள் என்பதை அஞ்சுபவர்கள் கவனிக்க வேண்டும்.

எகிப்து நாட்டில் நைல் நதி ஓரத்தில் வளர்ந்த பண்பாடு ஒன்று. ரோம் நாட்டில் வளர்ந்த பண்பாடு வேறு ஒன்று. ஆங்கில நாட்டில் தேம்ஸ் நதிக்கரையில் வளர்ந்த பண்பாடு மற்ருென்று. இப்படிபட்ட பண்பாடுகள் எல்லாம் ஒன்றை ஒன்று அழிப்பதற்காகவே வளர்ந்தவை அல்ல, ஒன்றை ஒன்று அழித்துவிட வேண்டும், என்பதற்காகவே அந்தந்தப் பண்பாடு கொண்டவர்களால் மேற்கொள்ளப்பட்டவையுமல்ல.

அதுபோலவே கங்கை நதிக் கரையிலே ஒரு பண்பாடு வளர்ந்தது. காவிரி நதி தீரத்திலே வேருெரு பண்பாடு வளர்ந்தது.

இப்படி இருவேருன பண்பாடுகளும் ஒன்றை ஒன்று அழித்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. இரு பண்பாடுகளும் அங்கே நல்லவை இருந்தால் எடுத்துக் கொள்ளலாம்—இங்கே நல்லவை இருந்தால் கொடுக்கலாம்' என்ற ரீதியில் வளர்வதினுல் தவறு ஒன்றுமில்லை.

இதைவிட்டு ஒருசாரார், தங்கள் பண்பாட்டை விட்டுவிட்டு மற்ருெரு சாராரின் பண்பாட்டைத் தழுவுவது எதற்காக?

தமிழர்கள் தங்களுக்கென உள்ள பண்பாட்டை விட்டுவிட்டு வேருெரு பண்பாட்டைத் தழுவ வேண்டுமென்பது, தங்களிடமுள்ளதை விட்டுவிட்டு வேருென்றுக்காக ஏங்கித் தவிக்க வேண்டியதாக முடியும்.

தமிழர்கள், தங்களின் பழம் சிறப்புப் பெற்ற தனிப்பெரும் பண்பாட்டினை கால வளர்ச்சிக்கொப்ப அமைத்துக் கொண்டு, தொடர்ந்து அதனைப் பாதுகாக்க முற்பட வேண்டுவதுதான் நியாயமாகும் அப்படி நமது பண்பாட்டை வளர்த்தால் நமது சிறப்பு குறித்து உலகம் உணரமுடியும் இந்த நிலையை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அண்மையில் பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்கள் தமிழ்மொழியின் சிறப்புக் குறித்துப் பேசுகையில்—'ழ' என்ற எழுத்து தமிழ் மொழிக்கே உரியது உலகில் வேறெந்த மொழியிலும் இல்லாதது தனித் தன்மை பெற்றது அந்த பெருமைக்குரிய 'ழ' என்ற எழுத்தைத் தமிழர்கள், மாவட்டத்திற்கு ஒரு வகையாக உச்சரித்து தமிழ் மொழியின் சிறப்பைப் பாழ்படுத்துகிருர்களே—என்று கூறி வருத்தப்பட்டார் என்று கேள்விப்பட்டேன்.

'தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் ஒரு எழுத்து மட்டுமல்ல பாழ்படுத்தப்படுவது—தமிழ் மொழி முழுவதுமாகவே பாழபடுத்தப்படுகிற இழிநிலை நிலவுகிறது. இந்த இழிநிலையைப் போக்க வேண்டும் தமிழின் சிறப்புக்கு ஊறு செய்ய முனைவோரைச் சாடவேண்டும் தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும். அதன் அழிவை மனதில் கொண்டு பிறர் காரிய மாற்றுவதைத் தடுக்க வேண்டும்,—என்று நாம் கூறினுல், அதுபற்றி எல்லாம் சேதுப் பிள்ளை போன்றவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்ப்பதில்லை, என்ருல் முடியாததால்—அல்லது விருப்பமில்லாததால் அல்ல. அவர்கள் வீற்றிருக்கிற 'பெரிய இடம் எண்ணிப் பார்க்க இடம் தருவதில்லை.

நமது பண்பாடு காப்பாற்றப்படுவதற்கு—தொடர்ந்து காலத்திற்கொப்ப வளர்ந்து நமக்குப் பெருமை தேடித் தருவதற்கு—அந்தப் பண்பாடு வளர்ந்த வழியான தமிழ் மொழியை நாம் அலட்சியப் படுத்திவிடக் கூடாது; நமது சிறப்புக்குரிய பண்பாட்டின் மூலமான மொழி—நமது தாய்மொழியான தமிழ், அதற்குரிய எல்லா இடங்களையும், ஏற்றத்தையும் பெறுவதற்கு மாணவர்களாகிய நீங்கள் பாடுபட வேண்டும்.

சட்டம் என்பது என்ன!

மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை வாதாடிக் கொண்டே யிருக்கிருன். மனிதன் பிறப்பே வாதாட்டத்துடன் தான் துவங்குகிறது. அப்படி மனிதன் வாழ்வு முழுவதும் மேற்கொள்ளுகிற வாதாட்டங்கள்தான், பகுத்து-வகுத்து-தொகுத்து உருவாக்கப்படும் போது சட்டமாக்கப் படுகிறது.

அப்படிப் பட்ட சட்டங்கள் தமிழில் ஆக்க முடியாதென்பதல்ல. இப்போது நாட்டில் உள்ள எல்லாச் சட்டங்களையும் தமிழ் மொழியில் ஆக்க முடியும். ஆனுல் அதற்குத் தேவையான பொறுமை திறமை நம்மிடம் இருக்க வில்லை என்பதை வெட்கத்தோடு ஒப்புக்கொள்ள முடியுமே தவிர, சட்டங்களை தமிழ் மொழியில் ஆக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்ள இயலாது.

இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செலுத்தியத் தமிழ் மன்னர்கள் தமிழ்மொழியில்தானே ஆட்சி செலுத்தினர்!

அவர்களிடம் வேண்டுமானுல் இப்போதிருப்பதைப் போன்ற தொகுக்கப்பட்ட விதிகள், உப விதிகள் அடங்கிய சட்டங்கள் இல்லாதிருந்திருக்கலாம், ஆனுல் அரசு முறைக்கான சட்டங்கள் இருக்கத்தானே செய்யும். அப்படி யிருக்கும்போது எத்தனை ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்று தொகுக்கப்பட்டுள்ள சட்டங்களை நாம் தமிழ் மொழியில் ஆக்கிக் கொள்ள முடியாது என்று கூறுவது தவறு.

வேண்டுமானுல் சட்டங்களைத் தமிழ் மொழியில் ஆக்குவதற்கு நிரம்ப காலம் தேவைப்படலாம். அதற்கு நமக்குப் பொறுமை வேண்டும். நிரம்ப பெருந் தமிழ்ப் புலவர்கள் வேண்டும், அவர்கள் இப்போதுள்ள சட்டங்களின் நோக்கங்களையும் உருவாக்க மூலத்தையும் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். சட்டத்தில் உள்ள வேறுமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் காணவேண்டும். இவையெல்லாம் கடினமானதுதான், ஆனுலும் தமிழ் மொழியின் வளம் அவற்றையெல்லாம் தமிழில் ஆக்க முடியும் என்றே நமக்குச் சொல்லுகிறது. எனவே சட்டக் கலலூரி மாணவர்களாகிய நீங்கள் வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்த முற்படுகிற காலத்தில் சட்டங்களை நம் மொழியில் ஆக்குவதற்கான பெருமுயற்சியில் ஈடுபட வேண்டும். மாணவர்கள் புதுப்புது சொற்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர்களாயிற்றே. அந்தத் திறமையை சட்ட நுணுக்கச் சொற்களை நம் தாய் மொழியில் உருவாக்குவதற்குப் பயன்படுத்த எதிர்காலத்தில் முற்பட வேண்டும்.

நீங்கள் உங்களிடம் வருகிற வாதி—பிரதிவாதிகளுக்காக வாதிடுபவர்களாக மட்டுமின்றி தமிழ்

8-ம் பக்கம் பார்க்க


அடுத்த வாரம்

சுல்தானு ரஸியா (கௌதமன்) தொடர்ச்சி

கேள்வி - பதில்

கலையரங்கம் (கோமதியின் காதலன்) விமர்சனம்

சொற்பொழிவுகள்

முதலியன

23—9—55

திராவிடன்

இதழில் வெளிவரும்

# 20-வது நூற்றாண்டு துவக்கத்தில் திராவிடர்--பார்ப்பனர் கல்வி நிலை

## ஆரம்பக் கல்வி . . . தொடர்ச்சி

1916-ம் ஆண்டில் சென்னை தொழிற் பள்ளி (Madras Trades Sehool) என்றும் அரசாங்கத்தாரால் சென்னையில் துவங்கப்பட்டன. சென்னை தொழிற் பள்ளியானது படிப்படியாக வளர்ச்சியடைந்து சென்னை பாலிடெக்னிக்காக உருவாகியுள்ளது. தோல் தொழிற் பள்ளியில் தோல் பதனிடுதல் [illegible] வகைகளைப் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் இதற்காக சென்னை [illegible]ல்லாவரத்தில் ஒரு ஆராய்ச்சிப் [illegible] நிறுவியதும் குறிப்பிடத்தக்கதாகும் மதுரை டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்டில் நடந்து வந்த நெசவு பயிற்சி வகுப்பு நிறுத்தப்பட்டு சென்னையில் நெசவு இன்ஸ்டிடியூட் (Textile Institute) என்ற பெயரில் ஒரு தொழிற் பள்ளி துவக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் காலத்தில் உயர்தரப் பள்ளிகளில் ஆங்கில மொழிக்குப் பதிலாக அந்தந்த நாட்டு மொழிகளே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்றும் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு வலுவடைந்திருந்தது, நவீன கால ஆட்சி நிர்வாகத் துறையில் நிரமிக்கவர் என்று புகழப்பட்டவரும் சென்னை மாகாண முதல் மந்திரி சபையில் முதன் மந்திரியாக இருந்த திராவிட சமுதாயத்தினர்க்கு நற்றொண்டு ஆற்றியவருமான பனகல் அரசர் அவர்கள் இதுபற்றி இந்திய சட்டசபையில் 1915-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ந் தேதி ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசினார். தீர்மானத்தின் உட்பொருளை நன்குணர்ந்த இந்திய சர்க்கார் போதனா மொழிப்பற்றி ஆவன செய்வதாக உறுதி கூறியதின் பேரில் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது. பின்னர் இப்பயிற்சி மொழிப் பிரச்னையை ஆராய்வதற்கு கவர்னர் ஜெனரல் லார்ட் செம்ஸ்போர்டு அவர்களால் நியமிக்கப்பட்ட கமிட்டியினர் ஆங்கிலத்தையே பயிற்சி மொழியாக விரும்பவே இம்முயற்சி தோல்வியுற நேரிட்டது,

தேசிய உணர்ச்சி காரணமாக ஆங்காங்கு தேசியப் பள்ளிகள் நிறுவப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். கிருஸ்துவமிஷனரிகள் தம் கல்வித் தொண்டில் ஒதுங்கி நிற்கவே தேசியவாதிகள் அவர்களது தொண்டுகளை ஒருவாறு மேற்கொண்டு நடத்தி வந்தனர் என்று கூறலாம்.

நிற்க இந்தக் காலத்தில் திராவிடர்களின் கல்வி நிலை என்ன என்பதைப் பார்ப்போம் சென்னை மாகாணத்தில் கல்வி கற்போரும் உத்தியோகம் வகிப்போரும் பார்ப்பனர்களாகவே இருந்து வந்த உண்மை திராவிட மக்களைவிட ஆங்கிலேயர்களால் அதிகம் உணரும்படி ஏற்பட்டது பார்ப்பனர்களைத் தவிர உள்ள மற்ற வகுப்பினரின் கல்வி நிலைமை விசேஷ கவனத்தால் முன்னேற்றமடைய வேண்டியிருந்தது. அதற்காக சர்க்கார் தனி முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென ஆங்கில அதிகாரிகள் சிலர் கூறிவருவாராயினர். தாங்களும் தங்கள் முயற்சியால் திராவிடர்கள் கல்வித் துறையில் முன்னேற்றமடைய ஆவன செய்தனர். கல்வித் துறையில் பார்ப்பனர்களே முன்னின்று பயனடைந்தனர் என நாம் கூறும் கூற்றுகளை சர்க்கார் புள்ளி விவரங்களே மெய்ப்பித்துக்காட்டுவனவாகும். எடுத்துக்காட்டிற்காக சில சர்க்கார் புள்ளி விவரங்களை வாசகர்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறோம்.

1910-ம் ஆண்டு பல்கலைக் கழக ஆர்ட்ஸ் பரிட்சைக்கு உட்கார்ந்த 1427 மாணவர்களில் 592 மாணவரே வெற்றியடைந்தனர். வெற்றி பெற்ற இந்த 592 மாணவர்களில்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர் | ... | 433 |
| பார்ப்பனரல்லாதார் | ... | 95 |
| கிருத்துவர் | ... | 52 |
| முகம்மதியர் | ... | 6 |
| இதரர் | ... | 6 |

என்று 1910—11-ம் ஆண்டு சர்க்கார் ஆட்சி அறிக்கைக் கூறுவதினின்றும் திராவிட சமுதாயத்தினரின் கல்விப் பிற்போக்கு நிலை தெரியவரும்,

இதே ஆண்டில் உயர்தரப் பள்ளிகளில் படித்துவந்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் கூட நாம் கூறும் உண்மையைத் தெரியலாம் நடைபெற்று வந்த மொத்தம் 349 உயர்தரப் பள்ளிகளில் 95324 மாணவர்கள் கல்வி பெற்று வந்தனர். இவர்களில்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர் | ...... | 43204 |
| பார்ப்பனரல்லாதவர் | ...... | 37399 |
| கிருத்துவர் | ...... | 8591 |
| முகம்மதியர் | ...... | 5548 |
| இதரர் | ...... | 582 |

என்று ஆட்சியாளரின் ஆண்டு அறிக்கைக் கூறுகிறது.

இதே ஆண்டு ஆசிரியப் பயிற்சிக் கூடங்கள் (Teachers' Training School and College) மொத்தம் 46 நடைபெற்று வந்தன. இவர்களில்

| | | |
|---|---|---|
| பார்ப்பனர் | ... | 815 |
| பார்ப்பனரல்லாதவர் | ... | 713 |
| கிருத்தவர் | ... | 601 |
| முகமதியர் | ... | 168 |
| தாழ்த்தப்பட்டவர் | ... | 66 |
| இதரர் | ... | 8 |

என்று மேற்கூறிய அரசாங்க ஆண்டு அறிக்கைத் தெரிவிக்கிறது. ஒன்றிரண்டு புள்ளிவிவரங்களை மட்டுமே எடுத்துக் காட்டியுள்ளோம் ஒவ்வொரு ஆண்டு கல்வி வளர்ச்சியிலும் பார்ப்பனர் எவ்வளவு தூரம் முன்னின்று பொதுமக்கள் செலவில் கல்வி வசதி பெற்று வந்தனர் என்பதை இவண் கூறப்புகின் இடம் அடைத்துக்கொள்ளும். தமக்கே கல்வித் துறை உரிமையுடையது போன்று அவர்கள் நடந்து கொண்ட விதம் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களையே விழிப்படையச் செய்து விட்டது. பார்ப்பனரல்லாத மக்களையும் தூண்டி விட்டு கல்வி உலகில் புகும்படியும் தீவிரப்பணி யாற்றும்படியும் செய்து விட்டது. இதன் பயன்தான் டாக்டர் நடேசனார் கண்ட திராவிடர் சங்கமும் திராவிடர் இல்லமும் திராவிடர் பால் பற்று கொண்ட சில ஆங்கிலேயர்கள் அன்று இருந்திராவிட்டால் திராவிட சமுதாயம் சீரழிந்து விட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. கீழ்த்தர வகுப்பினர், பிற்போக்கு வகுப்பினர் என்றெல்லாம் காரணம் காட்டி திராவிட மக்களுக்கு சலுகைகள் கொடுத்து, கல்வித் துறையில் புகுந்து சமுதாய உயர்வு அடையும் படியான வழி வகைகளைச் செய்தனர் ஆங்கிலேயர்கள்.

— (தொடரும்).

## அண்ணா சொற்பொழிவு...தொடர்ச்சி

மொழிக்காக—தமிழர்களுக்காக வாதிடுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

நாங்கள் கூட வழக்காடுபவர்கள்தான்.

நாங்களும் வாதாடுகிற கட்சிக்காரர்களாய்தான் இருக்கிறோம். நாங்கள் வாதாடுகிற வழக்கு நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது.

நாங்கள் வாதிடக்கத்திலே நிற்கிறோம். ஆனால் வாதியோ சில நேரத்தில் பிரதிவாதி பக்கத்தில் ஓடிவிடுகிறான்.

இவன் சாதியிலே தாழ்த்தப்பட்டவன் என்று அழைக்கப்படுகிறான். இவனும் மனிதன்தான். இவனுக்கும் மனித சமூகத்தில் இதரர்களைப் போன்ற வாய்ப்பும், வாழ்க்கை வசதியும் சமமான மரியாதையும் தரப்பட வேண்டும். எல்லோரையும் போல இவன் மனிதனாக வாழ வழிவகை வேண்டும் என்கிறோம்—வழக்காடுகிறோம், நாம்.

ஆனால் வாதியைக் கேட்டால் சில நேரத்தில் எனக்கொன்றும் தெரியாதுங்களே! என்று கூறி விடுகிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைகள் எல்லாம் மாறவேண்டும், எல்லா மக்களும் சமஉரிமையும் சமமான வாய்ப்பும் பெற்று வாழ்வின் இன்ப துன்பங்களில் உரியபங்கு பெறவேண்டுமென நாங்கள் வாதாடுகிறோம்.

வறுமை, அறியாமை, பேராவல் இவற்றின் விளைவாகத்தான் நாட்டில் பெரும்பாலான குற்றங்கள் புரியப்படுகின்றன. அதற்கான வழக்குகள் நடைபெறுகின்றன.—என்பது பொதுவாகவே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

சிலர், நாட்டில் குற்றங்கள் நிகழாமலிருக்க தனிப்பட்டவர்களைத் தூய்மையாக்கி சன்மார்க்க வாழ்க்கை நற்கருத்துக்களை போதித்துவிட்டால், அவன் பேராசை கொள்ளமாட்டான் — லஞ்சம் குறுத இவற்றை நினைக்கமாட்டான் என்று கருதுகின்றனர்.

இப்படி தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரையும் சன்மார்க்கப் போதனைக்குப் பிறகு நற்கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களாக்குவது சாத்தியமானதுதானா? இப்போதுள்ள நிலைமைகளில் 'இல்லை' என்பதும் அப்படி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கோரிய பலனைத் தரவில்லை என்பதும் நமக்கு நன்றாகத் தெரிகிறது. தனிப்பட்ட ஒவ்[illegible]வரையும் தூயவர்களாக்குவது நடைமுறைக்கு [illegible]ல, தனி மனிதர் மூலம் சமுதாயத்திற்கு [illegible] செய்வது முடியாது. எனவே மனித சமூகத்[illegible] கொடுமைகளைக் களைந்துவிட்டால் மனிதர்களில் குற்றம் புரிவோர் குறைவர்—வளரமாட்டார்கள் என்று நாம் கருதுகிறோம்.

இப்படி இரண்டு வகையான கருத்துக்களைக் கொண்டவர்களிடையே நெடு நாட்களாக ஒரு வழக்கு நடைபெறுகிறது.

சமுதாயத்தில் நிலவும் பெருங் கொடுமைகளை—ஏற்றத்தாழ்வு, வறுமை, அறியாமை ஆகியவைகளை ஒழித்துக் கட்டினாலன்றி குற்றங்கள் குறைய முடியாது.

நமது சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென நாம் விரும்பினால் நமது பண்பாட்டினை நன்கு தெரிந்தவர்களாக நாம் இருக்க வேண்டும். நமது பண்பாடு நமக்குத் தெரியாவிட்டால்--அந்தப் பண்பாடு வளரும் மொழியை நாம் பாதுகாக்காவிட்டால் நமது சமூகத்திற்கு நன்மை ஏதும் செய்ய முடியாது.

நமது பண்பாடு எது! பிற பண்பாடு எது! —என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அறம், தருமம் — என்ற இரு சொற்களையும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஒன்று போலத்தான் தெரியும். ஆனால் அவற்றின் பொருளை விரித்துப் பார்த்தால் வேறுபாடு நமக்குப் புரியும் தருமம்—இங்கே நாம் செய்தால் வேறொரு இடத்திலே அதற்குப் பலன் கிடைக்கும்—என்ற பொருள் கொண்டதாகும்.

ஆனால் அறம் என்பது—பெரியவர்கள் நடந்து சென்ற நல்வழியின் அடிச்சுவடுகளைக் காட்டுவது என்ற பொருள் பெற்றதாகும்.

இந்த இரண்டு சொற்கள் தரும் விரிந்த பொருளில் மகத்தான வேறுபாடுகொண்ட இருபெரும் வாழ்க்கை முறையினை நாம் தெரிந்து கொள்ள முடியும்;

தமிழ் நாட்டிலே வாழ்ந்த மன்னர்கள் எல்லாம், ஒருபோதும், தனது ஆட்சியை — தனது சொந்தச் சொத்து என்று கருதியதாக நமக்குத் தெரியவில்லை.

நம் மன்னர்கள், ஆட்சியை நடத்தும் பொறுப்பாளர்கள் என்றுதான் தங்களை எண்ணிக் கொண்டிருந்தார்களே தவிர, அந்த ஆட்சியை எப்படி வேண்டுமானாலும்—என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணியதாக வரலாறு இல்லை, இது தமிழர் பண்பாடாக இருந்து வந்திருக்கிறது. வேறு ஒரு பண்பாட்டு மன்னர்கள், தங்கள் ஆட்சியைத் தங்களது சொந்தஉடைமை என்றே எண்ணி நடந்து வந்திருக்கின்றனர். நாட்டையே சூதாடும் பொருளாக ஆக்கிய 'தருமர்'கள் இருந்திருக்கிறார்கள்! தன்னிஷ்டப்படி ஆட்சியைப் பிறருக்குத் தரும் 'தசரதர்'கள் இருந்திருக்கிறார்கள்,

இது, தமிழர் பண்பாட்டிற்கும்—வேறு ஒரு பண்பாட்டிற்கும் உள்ள மகத்தான வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது.

தமிழ் மன்னவர்கள், 'போர்' என்றால்—படை வரிசைகளைப் பெருக்கினார்கள், கரியையும் பரியையும் கணக்குப் பார்த்தார்கள். உலைக் கூடத்திற்கு ஓடினார்கள், படைக் கலன்களைத் தேடினார்கள்—என்றுதான் வரலாறு இக்கிறது. இது தமிழர் பண்பாட்டு வரலாறு.

ஆனால் வேறு பண்பாட்டு மன்னர்கள், 'போர்' என்றால்—வேள்வி செய்தார்கள், ஓமகுண்டம் வளர்த்தார்கள் என்றுதான் இருக்கிறது.

எனவே நமது பண்பாட்டினை முதலில் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பண்பாடு இதர பண்பாட்டிலிருந்து வேறுபட்டது —மாறுபட்டது — தனித்தது—சிறப்பானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பண்பாட்டை புரிந்து கொண்டால்தான் நமது மக்களுக்கு நாம் நன்மை ஏதும் செய்ய முடியும், இன்றேல் முடியாது.

அந்தப் பெருமைக்குரிய பண்பாட்டையும், அது வளர்ந்த வழியான தமிழ் மொழி பாதுக்காக்கவும், போற்றவும், வளர்க்கவும் அவைபெறவேண்டிய உரியஇடங்களை நாட்டில்பெறவும் ஆனமுயற்சிகளில்மாணவர்கள் இன்றில்லாவிடினும் நாளை பெரும் அளவில் ஈடு பட வேண்டும்—என்று குறிப்பிட்டார்.

பின்னர், மன்றச் செயலாளர் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

## வாசகர்களுக்கு

வணக்கம். திராவிடன் இவ்வாரம் 12 பக்கங்களாக வெளிவருவது குறித்துப் பொருத்தருள வேண்டுகிறோம். விவரம் அடுத்த வாரம்.
—நிர்வாகி.

### திருத்தம்

புஞ்சாபில் 3-ம் நாள் நிகழ்ச்சிகள் என்று செப்டம்பர் 2, 9 தேதிகளில் வெளிவந்துள்ளதை 2-ம் நாள் நிகழ்ச்சிகளாகவே கொள்ள வேண்டுகிறோம். 2-ம் நாள் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியே இவ்வாரமும் வெளிவந்துள்ளது.
ஆ—ர்.

5

**காட்சி 11**

இடம்...திகம்பரர் மாளிகைப் பூந்தோட்டம்,

நிலைமை...[கவிஞரின், பாண்டியன் பரிசு ராஜத்தின் கரத்திலே புதைந்து கிடந்தது. ஏட்டிலே எண்ணத்தைப் பறிப்பதும்—தலையை மேலே தூக்கிப் பார்ப்பதுமாக நேரத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். ஒரு ரோஜா மலர் அவளின் மேனியை முத்தமிட்டுவிட்டு கீழே விழுகிறது. திரும்பிப் பார்க்கிறாள்... 'களுக்' கென்ற சிரிப்பொலியை முழக்கிக் கொண்டே கோகிலம் வருகிறாள்.].

கோ : ஆசையோடு திரும்பிப் பார்த்து, அலட்சியத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டாயே ...நான் உன் அத்தானுகயில்லை யென்றா?

ரா : முள்ளால் குத்தாதே கோகிலம்!

கோ : ரோஜா மலரால்தானே அடித்தேன். அது கூடவா நோக வைத்துவிட்டது இந்தச் செந்தாமரை 'மேனியை! — கையிலென்னடி உன் அத்தானின் பரிசா?

ரா : பாண்டியன் பரிசு! இதுவும் அத்தான் தந்ததுதான்.

கோ : அவர் தந்தனுப்புகிறார் பரிசு...நீ பதிலுக்கு வேதனைத் தூதனுப்புகிறாய்!

ரா : நானிருப்பதே ... ...வேதனைக் கூண்டில் தானே...இங்கிருந்து குயிலோசையா கிளம்பும்?

கோ : அதைத்தானே அவர் விரும்புகிறார். பச்சைக்கிளி கூண்டுக்குள்ளே யிருந்தாலும், இச்சைக்குரியவர்களைக் காணும் போது... பேசாமலிருந்து விடுவதில்லையே!

ரா : நிலைமை அப்படி யிருக்கும்போது......!

கோ : வலை வீசும் சூழ்நிலையைக் கண்டு அசந்துவிடலாமா? அவரை......அத்தானின் மனதை அங்கே வேகவைத்துக் கொண்டு நீ மட்டும்...!

ரா : இங்கு மட்டுமென்ன? நானுந்தான் சாகாமல்சாகிறேன்!

கோ : ஆற்றோரத்து மணலிலே உன் அத்தான் பூங்கோதையை பிரிந்த பொன்முடி போல தவித்ததை நீ பார்த்திருந்தால்...!

ரா : நேற்று கூட வந்தாரா கோகிலம்?

கோ : வந்தார்—மனம் நொந்தார்.

(கீழே கிடந்த ரோஜா மலரை எடுத்துக் காட்டிக்கொண்டே)

இதோ இந்த மலரைக் கேள். இந்த மலர்ச் செடியின் அருகிலே நின்று கொண்டுதான் நேற்றெல்லாம் கதறினார். கலங்கினார். அந்தத் துயர காவியத்தை இதனிடம் கேளு ராஜம்!

(மலரைக் காதருகே கொண்டுபோகிறாள்,)

ரா : பேசும் ரோஜா இங்கிருக்க—

(கோகிலத்தை கட்டி அணைத்துக்கொண்டே)

பேசாத ரோஜாவிடம் கேட்பானேன். துயர காவியங் கேட்டுத் துடித்தவளே! அத்தானுக்கு நல்ல சேதி தர வேண்டும். அதற்கும் உன் துணைதான் தேவை!

கோ : என்ன! உன் அத்தானிடம் நானா பேசுவது?

ரா : பேச வேண்டாமடி! மடல் தருகிறேன்—தந்துவா!

கோ : மடலா?... அய்யோ! அந்த காந்தம் இந்த இரும்பை இழுத்துக் கொண்டால்!

ரா : அந்த கரும்புத் தோட்டத்துக்கு இந்த யானையை அனுப்புகிறேன். தோட்டத்துச்

மா. தங்கவேலர்

சொந்தக்காரி நானே பயப்படவில்லை, உனக்கேன் கவலை போய் வாடி அன்னமே!

*

**காட்சி 12.**

இடம்...ஆற்றோரம் — நிலா நேரம்.

நிலைமை [அழகுமயில் ராஜத்துக்காகக் காத்துக் கிடக்கிறான் மூர்த்தி. ஆடிவரும் பெண்ணோவியத்தைப்பார்த்ததும்அவனது கசப்பெல்லாம் மாறி நடந்துவரும் பூங்குயிலைத் திடுக்கிட வைக்க நினைத்தான். எனவே ஆற்று மணலிலே தவமிருந்த நெடுங் கல்லில் மறைந்து கொள்கிறான் மூர்த்தி. கம்பீர நடை போட்டுவந்த கட்டழகி கல்லிலே லாகவகமாகச்சாய்ந்து நிற்கிறாள். கல்லுக்குப்பின்னேயிருந்து ஓசைபடாமல் எழுந்த மூர்த்தி பெண்ணோவியத்தின் கண்களைக் கட்டிப்பிடிக்கிறான். அவளோ திக்குமுக்காடுகிறாள். இவனோ நிலவைப் பார்த்துச் சிரித்துக்கொண்டேஅவள்முன்னே நிற்கிறான், திகைக்கிறான். தன் பிடியிலே சிக்கியது ராஜமல்ல! நாட்டியக்காரி வள்ளி! பதைக்கும் நெஞ்சோடு கையை எடுத்துக்கொண்டே...,]

மூர் : ஆ!...மன்னிக்க வேண்டும், என் காதலி என்று நினைத்துக் கொண்டு...

வள் : நீரென்று நினைத்து நெருப்பைத் தொட்டிராக்கும்! நல்ல காதல் பித்தம். இது என்ன அமாவாசை இருட்டா...பட்டப் பகல் போல நிலா காயுதே— இதெல்லாம் சாகசம்! இந்த ஆண் ஜன்மமே இப்படித்தான்...முதல்லே, தப்பா நடந்துக்கிறது—பின்னாலே மன்னிப்புக் கேட்குறது...

மூ : உண்மையாகவே சொல்லுகிறேன் எந்தக் கெட்ட எண்ணத்தோடும்...

வ : நீங்கள் வரவில்லை—ஆனால் மனசுதான் துடிச்சுதாக்கும்.

மூ : தப்பாக நினைக்காதே— சொல்வதை நம்பு!

வ : நம்பித்தானே நின்று கொண்ருக்கிறேன்.

மூ : எனக்கொரு காதலியிருக்கிறாள். அவளைச் சந்திக்கத்தான் இந்த நிலா நேரத்தில் இங்கு வந்தேன்'

வ : அந்த வலையிலே நான் விழுந்து விட்டேனாக்கும்.

மூ : நான் வலை விரித்தாலல்லவா நீ விழுவதற்கு!

வ : உண்மையிலேயே உங்களுக்கொரு காதலி யிருக்கிறாளா?

மூ : ஏன் அப்படிக்கேட்கிறாய்?

வ : இல்லை...அந்தக் காதலி இந்த 'வள்ளி'யாக யிருந்தால் என் வாழ்விலே தேன் மழை பெய்யும்.

மூ : வள்ளி கேலி செய்யாதே ...தவறுக்குத்தான் மன்னிப்புக் கேட்கிறேனே என்னை விட்டுவிடு.

வ : நானல்லவா தவறு செய்திருக்கிறேன். என்னை நாடி வந்தது பூமாலை... வேண்டாமென்று வீசியெறிந்து விட்டேனே! அன்புக்கரங்கள் என்மேனியைத் தடவிக் கொடுத்து சூடேற்றின... அவசரக்காரி, துள்ளிக் குதித்து சுடுசொல் வீசினேன்! அழகு ராஜாவே...அந்த இன்ப இதயத்தில் இந்த அடியாளுக்கும்...

மூ : வள்ளி! நிலைமை மறந்து...

வ : நிலைமையை மறக்கத்தான் வைத்துவிட்டீர்கள். எங்கோ பறந்த என்எண்ணங்களை இழுத்துவைத்து இன்பக் கதையைக் கூறிவிட்டு ... ஓடிவிடப் பார்க்கிறீர்களே. முதலில் என் கண்கள் கட்டப்பட்டதும் கோபந்தான் வந்தது. ஆனால் சிங்க முகத்தைப் பார்த்ததும் என் சிந்தை யிழந்தேன் கண்ணா!

மூ : விடு என் கையை — தொடாதே.

வ : என்னையும் விட அழகான வளா அவள் நெளிந்தாடும் பூங்கொடியா? மின்னலிடையைச் சொந்தமாக்கிக் கொண்ட அன்ன நடைக் காரியா? அழியாத ஓவியமா? அணையாத ஜோதியா?

மூ : நீ எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள். ஆனால் அவள் உன்னைப்போல அல்ல!

அதையுந்தான் பார்த்துப் போகிறேனே!

[பிடிவாதமாகக் கல்லிலேயே அமர்ந்து கொள்கிறாள் அந்த நடன ராணி...அதே வேளையில் .........! ]

**காட்சி 13.**

இடம்......ஆற்றோரம்

நிலைமை...[காதலன் மூர்த்தியைச் சந்திக்க ஓடோடி வருகிறாள்ராஜம். பாதையிலே பயங்கர சிரிப்பொலி கேட்டுத் திரும்பிப்பார்க்கிறாள். வழிமறித்து நிற்கிறான் பலவேசம்.]

பல : துஷ்யந்தனைச் சந்திக்கப் போகும் சகுந்தலையே! நிதானமாகப்போ! பதை பதைத்து ஓடினால் உன் மலர்ப்பாதங்கள் நோகாதா?

ரா : பலவேசம்!

ப : ஆமாம் பலவேசமேதான். ஏன் அப்படி விழிக்கிறாய்? கையுங்களவுமாகப் பிடிபட்டு விட்டோமென்றா? ராஜம்! அந்த ஊதாரியை நம்பி......

ரா : யார் ஊதாரி?

ப : மூர்த்தி முரடன்! கண்டவர் பின் செல்லும் காமுகன். அவனை ஓடமென நம்பி வாழ்க்கைக் கடலிலே குதிக்கிறாய்....... துணை வரும் ஓடமல்ல அது...உன் வாழ்வைத் தின்ன வரும் திமிங்கலம். அவனைப் பற்றிக் கூறுவானேன். நமது குடும்ப கௌரவத்தை எண்ணிப்பார்.

ரா : கௌரவம் கெட்டு விடவில்லையே என்னால்!

ப : இருட்டிலே திருட்டுத் தொழிலுக்குக் கிளம்பும் கள்ளன் கூட தன் செய்கை இழிவானதென்று ஒப்புக் கொள்வதில்லையே! நடுநிசியிலே உன் கள்ளக் காதலனைத் தேடிக்கொண்டு கால்கடுக்க ஓடி வந்திருக்கிறாய்... இது அவமானமில்லையா? கலியாணமாகாத கன்னிப் பெண்... ஆற்றோரத்தில் ...ஹா ...ஹா ... ஹா.... நல்லவேடிக்கை.... இது அவமானத்தைத் தரவில்லையாம் இந்த அழகரசிக்கு!

ரா : பலவேசம்! நீயே கேவலப் படுத்துகிறாயே என்னை!

ப : நீ என்னை அவமானப்படுத்தினாய். அதே கண்ணாடியை உன் முகத்துக்கும் முன்னே திருப்பிப் பிடித்தேன். அவ்வளவுதான்.

ரா : உன்னை அவமானப் படுத்தும் நெஞ்சமா எனக்கிருப்பது

ப : என்னை வெறுத்தாயே அது எதைக் காட்டுகிறது?

ரா : உன்னையல்ல பலவேசம்..., உனக்கு நடக்க வேண்டுமென்ற அந்தத் திருமணத்தைத்தான் வெறுத்தேன். ஏனென்றால் ஏற்கனவே நான் இன்னொருவரின் அன்புக்கு அடிமையாகி விட்டேன்.

ப : யாரிடம் அந்தக் குப்பை மேட்டு நாயிடமா?...அன்பு!

ரா : இழிவாகப் பேசுவதால் இதயத்தையே மாற்றிவிட முடியாது.

ப : ஆணவக்காரி! அவ்வளவு திமிரா உனக்கு...!

[பேசிக் கொண்டே பலவேசம் ராஜத்தை நெருங்கினான். அந்தப் புதுப் புறாவோ பலவேசத்தின் பிடியில் சிக்காமல் விடு நோக்கிப் பறந்து சென்றது.]

(அடுத்த வாரம்)

# செய்திகள்

## இலங்கை

இராமநாதபுரம் மாவட்டம் செல்வ ரசன் தோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் 3—9—55-ல் கொள்ளுப்பட்டி காசி வீதி 610/4 இலக்க இல்லத்தில் பெரியார் எஸ். எம். துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

தலைவர் முன்னுரைக்குப் பின் செயலாளர், பொருளாளர் ஆகியவர்களால் கடந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சி வரவு செலவு கணக்கு கடித குறிப்புகள் சமர்ப்பிக்க சபை ஒப்புக் கொள்ளப்பட்டது.

விவாத அரங்கில் தோழர்களான ம. சி. அழகையா, க. சிவானந்தம், சி, விஸ்வநாதன், தா. வே. இராக்கன். மூன்றாவன் தனைத் தலைவர் ச. கு. முத்தையா, இரா. ச. பொன்னம்பலம் மற்றும் பலரும் பங்கு பற்றி சிறப்பித்தார்கள்.

கிராம முன்னேற்ற நிதி ரூ. 1038.50 சதம் உள்பட வங்கி இருப்பு ரூ. 2440.31 சதம் உள்ளது. பொருளாளர் கைவசம் ரூ. 27-25 சதம் உள்ளது என்று இணைச்செயலாளர் பொன்னம்பலம் சபையோர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தார். தலைவர் பின்னுரையுடன் செயலாளர் வணக்கம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

## பம்பாய்

29—8—55 மாலை 6-மணிக்கு அந்தேரி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஏ. என். நாயர் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் செயலாளர் தோழர் எஸ். எம். பாண்டியன் கூட்டத்தை துவக்கி வைத்து ஜனவரி முதல் ஜுன் முடிய வரவு செலவு கணக்குகளையும் போக்குவரத்து மடல்களையும் வாசித்து காண்பித்தார். பின்னர். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் எஸ் முதது, இரா. தஞ்சைத்துரை, எஸ். கணேசன் ஆகியோர் கோவா படுகொலையை குறித்தும் கழக வளர்ச்சியை குறித்தும் பேசியபின் கோவா படுகொலை குறித்தும் தாராவி கழகத் தோழர் கோதைராசன் மரணத்துக்கும் அந்தேரி தி. மு. கழக முன்னாள் செயற்குழு உறுப்பினரான தோழர் பி. ராசா அவர்களின் மகன் மறைவு குறித்தும்அனுதாப தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### பள்ளிகொண்டா

22-8-55 இரவு 8 மணிக்கு தோழர் பி. சி. விசுவநாதன் தலைமையில் தி. மு. கழக நிர்வாகக்குழு கூடி. இரா. நெடுஞ்செழியன் அவர்களை பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தும் கோவா அடக்குமுறையைக் கண்டித்தும் உயிர் நீத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

*

23—8—55 தேதியன்று இவ்வூரில் கோவா அடக்குமுறை அட்டூழியத்தை கண்டிக்க நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் தி. மு, க. சார்பில் தோழர் அரங்கசாமி பேசினார். அன்று எல்லா கடைகளும் மூடப்பட்டன.

### திருப்பத்தூர்

வ. ஆ. திருப்பத்தூர் தி. மு. கழகத் தொண்டரும் மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்றவருமான தோழர் கலைவாசனின் தாயார் சினனகண்ணம்மாள் அவர்கள் 25—8—55 அன்று இயற்கை யெய்தியமைக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என தி. மு. கழகத்தினர் அறிவிக்கின்றனர்.

## திராவிடம் எம் திருநாடு!

நம்நாடு நமதாக வேண்டும்! நாமே
நமையாளும் நிலைவேண்டும்! மாற்றார் வந்து
தம்மனம்போல் புகுந்திங்கே வேட்டையாடும்
தாழ்வுநிலை வேரோடு கருகல் வேண்டும்!

இந்நாட்டின் பொருளெல்லாம் இங்கே தங்கி
இன்பத்தைப் பொழிகின்ற நிலையும் வேண்டும்!
பொன்னாட்டார் புனல் தாண்டிக் கூலிக்காகப்
பொருமலுடன் வெளியேறும் நாளே போழ்க!

சீனவும், ருசியாவும் வையத்துள்ள
சீருடைய நாடெல்லாம் நம்மைப் போற்ற
மீணடும் கருவிழியார் மாற்றார் நாட்டில்
மிடுக்காடு தூதர்களாய் தோன்றல் வேண்டும்!

அறிவோடும், அன்போடும் எந்தன் நாட்டில்
அனைவரு மோர் உயிராக வாழல் வேண்டும்!
பிறபகைவர் கனவிலும் நம்நாட்டைத் தாக்கப்
பேரச்சங்கொள வேண்டும், வலிமை வேண்டும்!

எழிலான் அரும்புகளைச் சொந்தத் தாய்மார்
எரிபசியால் விலை கூறும் நாளே வீழ்க!
பொழில்மலர்போல் பொதுஉடமை பூக்க இங்குப்
பொருள்யாவும் யாவர்க்கும் சொந்தம்!
[சொந்தம்!

தேவைக்கு மிஞ்சியதைத் தேடாதுள்ளான்
தேசுடைய வாழ்வுடையான்! நல்லான்! ஆயின்
தேவைக்கு மிஞ்சியதைத் தேடிப்போவோன்
தோற்றத்தால் உள்ளத்தால் கள்ளன், பேயன்!

உழைத்துண்ணும் எல்லோரும் மேலோர்! மற்ற
உருவங்கள் யாவும்கீழ் தாழும் தாழும்!

அழிந்தோடும் அறியாமை விழித்துக் கொள்வீர்,
அதைவாழ்வின் படியாகக் கொண்டுள்ளோரே!

கன்னிமொழிச் செந்தமிழைக் கீழே தள்ளும்
கயவாளி கைக்கூலி ஒழியல் வேண்டும்!
என்தமிழை அரங்கேற்றிச் செங்கோல் தந்து
எழுச்சிவிழாக் கொண்டாடும் நாளே வாராய்!

பிழைப்புக்கும், பெருமைக்கும் தமிழைப் போற்
[றிப்
பெற்றிழந்தாடுபவர் ஒழிதல் வேண்டும்!
தழைத்தோங்க வழிசெய்வீர் தமிழர் பண்பு,
தமிழ்க் காற்றைத் தமிழ்ச் சோற்றை
உண்போரேநீர்!

சீரான விஞ்ஞானம் ஓங்கல் வேண்டும்!
சீரியநற்கலை எல்லாம் பெருகல் வேண்டும்!
பேரறிஞர் பிறநாட்டில் ஆக்கிச்சென்ற
பெருநூல்கள் நம்மொழிக்கு ஏற்றல் வேண்டும்!

வகையான தொல்லையிலா எல்லையொன்று
வளமான எம்நாட்டைக் காத்தல் வேண்டும்!
அகிலத்தில் ருசியாவும் அமெரிக்காவும்
அமைத்துள்ள அரண் நிக்க, நாமும் நிற்போம்!

திருடர்கள் உள்ளவரை காவல்வேண்டும்!
தீயவர்கள் மையத்தில் தூய்மைமாயும்!
பிறநாட்டார் எம்நாடு அவர்நாடென்று
பேசும்வரை திராவிடம்நம் திருநாடென்போம்!

"அன்பாளன்"

### மேலப்பாளையம்

மேலப்பாளையம் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தே. ந. ஆறுமுகம் தலைமையில் 2—9—55 அன்று கூடி கோவா (அடக்குமுறை) துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும் மேற்படி பிரச்னை சமுகமாகத் தீர உடனடியாக ஏற்பாடு செய்யும்படி இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் வரும் நகர சபைத் தேர்தலில் எந்த அபேட்சகருக்கும் ஆதரவளிக்காமல் வாக்களிப்பது மட்டும் அந்தந்த வார்டுகளில் நேர்மையானவருக்கு வாக்களிப்ப தென்றும். திராவிடநாடு பிரிவினைவாரம் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பொறையார்

அழகிரி படிப்பக துவக்க விழா பொதுக்கூட்டம் 27—8—55 அன்று படிப்பகத் தலைவர் சி. ஜம்பு தலைமையில் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. தோழர் அறிவுடைநம்பி, பேராசிரியர் க. அன்பழகன், ஆகியோர் அழகிரியின் தொண்டு, ஹிந்தி நுழைவின் கெடுதல் பற்றியும் விரிவுரையாற்றினர்கள். செயலாளர் நன்றி நவில கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

*

பொறையார் 5—9—55 யன்று நாடார் உயர்நிலைப்பள்ளி மாணவ மன்றத் தலைவர் தேர்தல் நடந்தது. பல மாணவர்கள் போட்டியிட்டனர், தோழர் ஜி. காசிநாதன் அவர்கள் அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

### தி. மு. கழக பிரச்சாரக்குழு

மாதவரம் பிர்க்கா தி. மு. கழக ஆலோசனைக் கூட்டம் 4-9-55 மாலை 3-30 மணிக்கு மாதவரம் செயராசு இல்லத்தில் திருவொற்றியூர் தோழர் எ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது, அதுபோது பொன்னேரி தொகுதியிலுள்ள கிராமங்களுக்குச்சென்று, நம் கொள்கையைபரப்ப வேண்டும் என்று முடிவு செய்து அதற்காக ஒவ்வொரு கிளைக்கழகமும் செயலாளர் உள்ளடக்கி 3 பேர் வீதம் 15 பேர்கள் கொண்ட பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டது அக்குழுவிற்கு செயலாளராக முராசன் துணைச்செயலாளராக மா. பொ. வேதாச்சலம் பொருளாளராக M. கணபதி (ஜில்லா போர்டு உறுப்பினர்) ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றி தேநீர் விருந்துக்குப் பின் புகைப்படம் எடுக்கப்பட்டது.

நீர்மானம் :—

பொன்னேரி தாலுகாவிலுள்ள தி. மு. கழக கிளைகளும் இப்பிரச்சாரக் குழுவில் ஒத்துழைக்குமாறும் ஒவ்வொரு கிளையும் செயலாளர் உள்ளடக்கிய மூன்று பேரை தேர்ந்தெடுத்து இக்குழுவிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறது.


Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1




மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஒட்டல், மதுரை
" 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்



செப்டம்பர் 17-ல்

தி.மு.க. பிறந்த நாளில் பிறக்கிறது

'காவியம்'

(கவிதை வார இதழ்)

ஆசிரியர் : சுரதா

முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை

நிர்வாகி : காவியம்

சென்னை-12

பஞ்சாபில் மூன்று நாட்கள்

# பிகாரிலால் பாசமும் தக்கர்தாஸ் பரிவும்.

பிகாரிலாலும், தக்கர்தாசும் இணை பிரியா நண்பர்கள். அவர்களிருவரும் ஆதிக்குடி பரம்பரையினர். டாக்டர். அம்பேத்காரைத் தலைவராகக் கொண்ட இன எழுச்சி வீரர்கள். ஆனால் அரசாங்கப் பணியாளர்கள்; உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள்.

அவர்கள் இருவரும் சந்த்ராம் சேவையைப் பற்றியும், அம்பேத்கார் சேவையைப் பற்றியும் அறிந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் தலைவர் பெரியார் ஈ. வே. ரா வைப் பற்றி நன்கு அறிந்திருந்தலே என்னை வியப்பில் ஆழ்த்திற்று!

எங்கள் பகுதியில் சந்த்ராமும், அம்பேத்காருமானுல், உங்கள் பகுதியில் பெரியார். ஈ. வெ. ரா—என்று உணர்ச்சி பொங்கக் கூறினர் பிகாரிலால்!

தீண்டப்படாதார் உரிமைக்காகப் பெரியார், அன்று காங்கிரசில் இருந்த போதே, வைக்கத்தில் சத்தியாகிரகஞ் செய்து, பெரியாரும் அவர் தம் மனைவி நாகம்மையாரும் சிறை தண்டனை ஏற்றதையும், திருவிதாங்கூர் ஆட்சிக் கொடுமையினையும், இன்றளவும் நாங்கள் மறந்தோமில்லை என்றனர்கள் பிகாரிலாலும், தக்கர்தாசும்!

கலப்புத் திருமணத்தை உங்கள் பெரியார் தமிழகத்தில் நடைபெறச் செய்ததைக் கண்டு வியந்தோம். எங்கள் சந்த்ராம் கூட அவர் கையினலேயே எண்ணற்றக் கலப்புத் திருமணங்களைச் செய்ததாலேயே அவர்கள் பால் நாங்கள் ஈர்க்கப்பட்டு, இன்றளவும் அவரைக் கண்டு, களிப்புரையாடிச் செல்கிறோம் என்றனர்கள்.

சரி! அவையெல்லாம் இருக்கட்டும்! எங்கள் பாபுஜியை உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?......என்று ஆர்வத்துடனும் வியப்புடனும் கேட்டார்கள் பிகாரிலாலும், தக்கர்தாசும்.

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் 1949 ஜூலை மாத வாக்கில், தோழியர் மணியம்மை என்கிற மாதை மணம் புரிந்து கொண்டார்......!

இடைமறித்து......ஏன் முதல் மனைவி நாகம்மையார் — வைக்கம் வீராங்கனை இல்லையோ? என்று கேட்டார் பிகாரிலால்.

அதற்கு, இல்லை! அந்த அம்மையார் 20 ஆண்டுகட்கு முன்னமே மறைந்து விட்டார் ...என்றுசந்த்ராமே பிகாரிலாலுக்கு விளக்கம் தந்து விட்டார்.

பிறகு......! என்று என்னைப் பேசவிட்டார் பிகாரிலால்.

பெரியார்—மணியம்மை திருமணத்தை எதிர்த்து தமிழகத்தில் பல்லோர் குரல் எழுப்பினர்! பெரியாரின் நிழலாம், வலக்கையாம், தளபதி அண்ணா அவர்கள், தடுத்தும் தள்ளாத வயதிலா திருமணம் என்று சினந்து, இத்திருமணம் இயக்கக் கொள்கைக்கே பொருந்தாது எனக்கூறி பெரியாரை விட்டுப் பிரிந்து விட்டார். வேறு அமைப்பையும் Dravidian Progressive Federation என்கிற பெயரில் தோற்றுவித்தார்!

இதற்குள் பெரியாரின் திருமண எதிர்ப்பாளர்கள் பட்டாளம் ஒரு பக்கமும், ஆதரவாளர்கள் பட்டாளம் ஒரு பக்கமும் தோன்றி விட்டன!

அந்த ஆதரவாளர் பட்டாளத்தில் சந்த்ராம் அவர்களும் சேர்ந்தார்!

இடைமறித்து ...... சந்த்ராம் பஞ்சாபிலிருக்கிறார்—அவர் எப்படி தமிழகத்து ஆதரவாளர் படையில் சேர முடியும் என்றார் பிகாரிலால்!

பிகாரிலால் இச்சம்பவத்தை எவ்வளவு உன்னிப்பாகக் கேட்கிறார், பார்த்தாயா திர்வேடம்? நல்லா விளக்கமா சொல் என்றார் சந்த்ராம்.

நான் தொடர்ந்து சொன்னேன்: அப்பா சந்த்ராம் ஜீ அவர்கள். பெரியார் திருமணத்தை, அவருக்குற்ற சிற்சில சான்றுகளைக் காட்டி பெரியார் திருமணத்தால் ஒன்றும் பாதகமில்லை என்று அவரது பழைய கால நண்பர் பெரியாருக்கு ஒரு கடிதம் தீட்டினர் போலும். அக்கடிதம் அப்படியே "விடுதலை" 18—8—1949 தேதியிட்ட இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது!

அக்கடிதத்தைக் கண்டதும் எனக்கு ஓரேவியப்பாய் விட்டது. நல்லவேளை! அக்கடிதத்திற்கு அடியில் சந்த்ராம் ஜீ யின் முழு முகவரி காணப்பட்டது.

பஞ்சாபிலும் பெரியாருக்கு அறிமுக

## "திருவேடம்"

மானவர் ஒருவர் இருக்கிறாரா? அவர் யார்?—என்பதை அறிய வேண்டுமென்று நான் சந்த்ராமுக்கு முதன் முதல் தீட்டிய கடிதம் இதுதான் என்று 18—8—1949-ல் தீட்டிய கடிதத்தைக் காட்டினேன்.

சந்த்ராமுக்கும்—எனக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டக் கடிதக் கற்றைகள் (250—250 கொண்ட இரண்டு கடிதக் கட்டு "பைல்கள்") அனைத்தும் காண்பித்தேன்.

அவைகளை பிகாரிலாலும், தக்கர்தாசும் புரட்டிப் புரட்டிப் பார்த்து எனது ஆங்கிலத்தில் கடிதம் வரையும் ஆற்றலையும், பிறர் உள்ளங்கவர் தன்மையையும், அளப்பற்கரிய வார்த்தைகளால் வருணித்தார்கள்! உண்மையிலேயே என் மீது பாசமும் பரிவும், அதுமுதல் கொண்டாடத் தலைப்பட்டார்கள்! என்னை அவர்களது உற்ற நண்பனுகவே ஏற்றுப் பழகினர்கள்! நேசித்தார்கள்!

அப்படி, கடிதம் மூலம் சந்த்ராம்ஜீயிடம் நட்பு கொண்டாடி இன்று நேரிலேயே நட்புரிமை கொள்ள வந்து விட்டேன் என்றேன். அதோடு அக்கடிதக் குவியல்களினின்று, சந்த்ராம் அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைத் திரட்டி தமிழில் வரைந்த கட்டுரையையும் "சண்டே அப்ஸர்வரில்" கோர்த்து வரைந்த ஆங்கிலக் கட்டுரையையும் அவர்களுக்குக் காண்பித்தேன். அவர்களுக்கெல்லாம்ஓரே ஆச்சரியம்! ஆனந்தம்!

அது என்ன "நோட் புக்" என்றார்கள்.

அது ஒன்றுமில்லை! நான் இதுவரை பலப்பல ஆங்கில பத்திரிகைகளில் எழுதிய விஷயச் சேர்க்கை (ஆல்பம்—Album) என்றேன். அதையும் வாங்கிப்பார்த்து, படித்து மிகமிக ரோஷமாகவும், காரசாரமாகவும் எழுதி யிருக்கிறீர்களே!...தாங்கள் என்ன "ஜர்னலிஸ்டோ" (Journalist); பத்திரிகை நிருபரோ (Reporter) என்று ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் வினவினர்கள்!

அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. நான் சாதாரண ஆள்! பெரியார்—அண்ணா என்றால் ஒரு பரவசம்! ஒரு உணர்ச்சி! பகுத்தறிவு என்றால் அதன் ஒளி காண நீங்கா விழைவு! சீர்திருத்தம் என்றால் நடைமுறையில் கையாண்டு காட்டு என்ற துணிபு! சுயமரியாதை யென்றால் தன்மானங் காத்தல் எவ்வெவ்விதம் என்று கண்டொழுகல்! திராவிட நாடு என்றால் மீட்பது எப்போது? எங்ஙனம்? என்ற ஏக்கம்!—ஆகிய இவைகளால் உந்தப்பட்ட ஒருவனே யொழிய, தாங்கள் தூக்கி எடுப்பதைப்போல் அத்துணை செருக்குற்றவனன்று என அவையடக்கம் பேசினேன்! எனது சொந்த வாழ்க்கை நிலையையும் உள்ளது உள்ளவாறே எடுத்து இயம்பினேன்! என்ன சொல்லியும்........?

மேலும் மேலும் எனது துணிவையும், உழைப்பையும், உண்மை நெறியையும், ஏற்றிப் போற்றியே தீர்த்தார்கள் சந்த்ராமும், பிகாரிலாலும், தக்கர்தாசும்! பாட்டி சுந்தர்பாய் அம்மைக்கு ஆங்கிலம் தெரியாததால் எங்கள் பாவனைகளைக் கண்டு புருவம் நெரித்தார்கள். இடையிடையே எனது பேச்சை இந்தியில் மொழிபெயர்க்கச் சொல்லிக் கேட்டார் பாட்டி!

அந்த மொழிபெயர்ப்பு வேலையைஹேதத்ராம் அவர்களே ஏற்றுக்கொண்டதால் எங்களது பேச்சைக் கேட்டாரே யொழிய பேச்சில் கலந்து கொள்ளவில்லை அவர்.

காலையில் துவக்கிய பேச்சு மணி பதினொன்றுக்கு வந்து நின்றது. அன்று வியாழக்கிழமை. பதினொரு மணிக்கு ஆபீஸ் செல்ல வேண்டுமாகையால் பிகாரிலாலும் தக்கர்தாசும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட எழுந்தார்கள்.

பிகாரிலால் சந்த்ராமிடம், தோழர் திர்வேடத்திற்கு மத்யானம் எங்கள் வீட்டில் சாப்பாடு! அவசியம் அனுப்பிவையுங்கள்! வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது!...என்றார்.

சரி! ஆகட்டும்! என்றார் சந்த்ராம்.

பிகாரிலால், ஹேதராம்ஜியை விளித்து நண்பர் திர்வேடத்தை, இன்னும் ஒரு மணி நேரங்கழித்து, தாங்கள் ஹோஷியார்பூர் பஜார் வரும்போது, உடன் அழைத்து வந்து தக்கர்தாஸ் ஆபீசில் விட்டு விடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். என்னையும் ஜாடைக் காட்டி கண்டிப்பாய் வாருங்கள் என்றார்.

பிகாரிலாலும், தக்கர்தாசும் வந்த காரிலேயே திரும்பி ஹோஷியார்பூர் அலுவலகங்களுக்கு சென்று விட்டார்கள்.

புரானிபாஸியிலிருந்து ஹோஷியார்பூர் இரண்டு மைல் தூரந்தான்...நாம் சைகிளிலேயே போகலாம்! இங்கேயே இருங்கள்! நான் வீடுபோய் திரும்பி வந்து உங்களை ஹோஷியார்பூர் அழைத்துச் செல்லுகிறேன் என்று கூறிச் சென்றார் ஹேதராம் அவர்கள். பிற அடுத்து.........!

# திராவிடப் பூங்கா

"வந்தைவேள்"

## சுயமரியாதை!

ஆம்! சுயமரியாதை!...தன்மானம்!... Self Respect!...

அது நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து உடம்பில் நன்கு ஊறி உறைந்து கிடக்கும் சங்கதிதான்!

ஆனால் எது சுயமரியாதை!...ஒரு கணம் சிந்தனையைக் கிளறி விட்டு, "எது சுயமரியாதை?" ...என்பதற்கு விடை காணப் புகுந்து பாருங்கள்!...

சுயமரியாதையைப் பற்றிக் கூறக் கேட்டதும், நினைத்துப் பார்த்ததும், பெரிய புத்தகம் ஒன்று எழுதி விடலாமே என்றுதானே தோன்றிற்று! ஆனால் 'எது சுயமரியாதை?' என்ற கேள்விக்கு அறுதியிட்டப் பதில் பிடிபடாமல் தவித்துத்தானே நிற்கிறோம்?...ஏன் அந்த நிலை? அதுபோது நமக்கெல்லாம் சுயமரியாதையைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்ற அர்த்தம்?... ...அப்படிக்கு அன்று!... சுயமரியாதையை நாம், உணர்ச்சி கொண்டே ஏற்கிறோம், போற்றுகிறோம், விளக்கிக் காட்டுகிறோம்! உணர்வெழுச்சியால் விளக்கப் புகுந்துவிட்டமையாலேதான் சுயமரியாதையைச் சொற்கள் கொண்டு விளக்கத் தயங்கித் தத்தளிக்கிறோம்! உணர்ச்சி, மலையைப் போன்று எழுந்து ஓங்கித் திகழும்போது வார்த்தைகள் எற்றுக்கு என இருந்து விடுகிறோம்.

சரி! சுயமரியாதை உணர்ச்சியற்றவர்களுக்கு சுயமரியாதையை விளக்க, விளக்கிப் புகட்ட சொற்கள் வேண்டாவோ?

வேண்டும்! எச்சொற்களால் தெளிய வைப்பது?...சிந்திப்போம்!

சுயமரியாதையைப் பற்றி நினைக்கு முன்னமே நம் கண்முன் சுயமரியாதை இயக்கத் தந்தையாம் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்தான் காட்சியளிக்கிறார்! அவர் இன்றேல் தமிழ் நாட்டில் சுயமரியாதை உணர்வே வளர்ந்திருக்காது என்று கூறினால் அது மிகையா? அன்று! அன்று!! அவரன்றோ சுயமரியாதை என்னும் பெயரைக் கொண்டே சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்!

1928 லிருந்தே சுயமரியாதைப் பிரசாரத்தைக் கைக்கொண்டார் பெரியார்! சிலபலர், பலர், பலப்பலர் விழிப்புணர்ச்சி பெற்றனர்! பெற்றுத் திரண்டெழுந்தனர். அன்று (பிப்ரவரி 17, 1929) செங்கற்பட்டு நகரத்தில்! மாகாண முதல் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டி ஆக்க வேலைகள் பல புரிய உறுதி உள்ளம் பூண்டனர்!

சுயமரியாதை உணர்வின் தந்தை, பெரியாரென்றால், முதல் சுயமரியாதை மாநாட்டின் தலைவர், காலஞ்சென்ற நமது மதிப்பிற்குரிய. பட்டிவீரன்பட்டி W.P.A. சௌந்தர பாண்டியனார் ஆவார்!

மற்றும் சர். பி. டி. இராசனார் என்ன, டாக்டர் சுப்பராயனார் என்ன, சர். ஏ. டி. பன்னீர்செல்வமென்ன, எஸ். ராமநாதன், சர். ஆர். கே. சண்முகம், சர் ஆற்காடு ராமசாமி, வ. உ. சி., எஸ். முத்தையா என்ன இன்னும் மற்ற மற்ற அறிஞர்கள் அத்தனைபேரும் சுயமரியாதையைப் பற்றிச் சிந்தித்து தெளிவு கண்டு ஏனைய தென்னாட்டு மக்களையும் தெளிய வைத்தார்கள். என்னே அவர்களது சேவை!

நிற்க. மீண்டும் "எது சுயமரியாதை?" என்ற கேள்விக்கு வருவோம்.

இப்போது ஓரளவு விளக்க முடியுமென்று எண்ணுகிறோமல்லவா?

விளக்கப் பார்ப்போம்! 'இந்தாய்யா! மரியாதையாகப்பேசு! மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும் தெரியமா? மரியாதை கெட்டுப் பேசினால் மரியாதை கெட்டுப் போகும்!' என்று சாதாரணமாகப் பேசுகிறோமல்லவா? அங்கே அடிபடும் 'மரியாதை' சுயமரியாதைதானே!

பெரியார் ஈ. வெ. ரா. காங்கிரசில் பணியாற்றினார். அஞ்ஞான்று காங்கிரஸ் பார்ப்பனர்களின் கோட்டையாக உருவெடுத்து கொடிகட்டி ஆடிற்று! பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்போடு, பார்ப்பனர்களென்போர் சகல ஏகபோக உரிமைகளையும் பெற்று பார்ப்பனர் அல்லாதவர்களைப் பிறப்பால் தாழ்ந்தவர் எனக்கொண்டு, பார்ப்பனர் அல்லாதவர்களை மட்டந்தட்டி எச்சலுகையும் காட்டாது அவர்களைக் கூண்டோடு உதாசீனஞ் செய்ய முற்பட்டார்கள் சாதி வெறியர்கள்!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று எழுந்தார் பெரியார்! பார்ப்பனர்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் பார்ப்பனர் அல்லாதாராகிய எங்களுக்கும் வேண்டும்! இதில் சாதி குறுக்கிடுவதைச் சகியோம்! பார்ப்பனர்கள் எங்களைச் சூத்திரன் என்று கூறுவது மிகமிக அவமானம்! எங்களுக்கும் மான உணர்ச்சி உண்டு! சூத்திரன் என்றால் ஆத்திரங் கொண்டு அடிப்போம்! என்று தன்மான முழக்கம் முழங்கினார், சுயமரியாதைப் போர்க்கொடி தூக்கினார் பெரியார்! அதுதான் சுயமரியாதை உணர்வு!

குருகுலப் போராட்டத்தில், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் மகனுக்கு பார்ப்பனர்கள் சாப்பிடுமிடத்தில் இடங்கிடையாது வெளியில் தனியேதான் சாப்பாடு என்று கூறிய வ. வே. சு. அய்யரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டதும் பெரியார்தான்! அது எதன் பொருட்டு? தன்மானம் இழப்பதா? பார்ப்பனன் என்ன மரியாதையில் உயர்ந்தவன்? நாங்கள் என்ன மரியாதையில் தாழ்ந்தவர்கள்? உயிர் அனைவருக்கும் ஒன்றுதான்! என்று போர்முரசங் கொட்டினதும் அச்சுயமரியாதை வேண்டிதான்!

தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது தமது நண்பர்களுடன் உல்லாசப் பிரயாணம் சென்றார். அவரது தோழர்களாக அமைந்த அத்தனைபேரும் பார்ப்பனர்கள்! ராமநாதன் ஒண்டிதான் அப்பார்ப்பனர்களின் மத்தியில் பார்ப்பனன் அல்லாதார்! போன இடத்திலே ஒரு அய்யா வீட்டில் எல்லோருக்கும் சாப்பாடு என்று ஏற்பாடு ஆனது! உல்லாசமான ஆட்டப்பாட்டங்கள் அடங்கியதும் சாப்பாட்டு வேளை வந்தது! எல்லாப் பார்ப்பனத் தோழர்களும் சாப்பாட்டிற்கு ஏற்பாடான, அய்யர் வீட்டில் நுழைந்து விட்டார்கள்!

தோழர் ராமநாதன் "சூத்திரன்" அல்லவா? அய்யர் வீட்டு வாயிற்படிக்கு மேல் செல்ல முடியவில்லை.

டேய் நரசிம்மாச்சாரி! இதுதானடா நட்பு? தோழமை? என்று கெஞ்சினார் பாவம் இராமநாதன்!

என்னடா பண்றது? தேவாள்ளாம் சாப்பிட்டபிறகு சூத்திராளுக்குப் போடுவா? அதுதான் முறை! வழக்கம்! அங்கே திண்ணை மேல் உட்கார்ந்திரு! கடைசியில் சாப்பாடு கொண்டுவரச் சொல்றேன்! என்று கூறிச் சென்று விட்டார் நரசிம்மாச்சாரி!

தோழர் ராமநாதன் எந்த நிலையில் தவித்தார், புழுங்கினார், வாடினார் என்பதை அவர் வாயாலேயே கேட்போம் :—

I was no Brahmin· I was told I should be served outside after the others had finished.

I felt I was struck in my face· The shock overwhelmed me and I grew sick with anger...Should I rush in and create a scene! Should I thrash my pals for having. connived at this insult offered to me?

I was ashamed of my tears, but I could not help them...I hid myself under a tree and wept! And went without food!...

பாவம்! அழுதாராம்! அன்று சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்தாராம்!

இப்போது தோழர் ராமநாதன் ஏன் அழுதார்? தன் மரியாதையை இழந்ததால், சுயமரியாதை பாதிக்கப் பட்டதால், தன்மானம், சாதிச் செருக்கினால், தாக்குண்டதால்! அல்லவா?

இப்போது எது சுயமரியாதை என்பது விளங்க வில்லையா நமக்கு?

அதே போல் எல்லா துறைகளிலேயும் சுயமரியாதையைக் கண்டு காப்பாற்றப் புகுகிறோம்.

என் வீட்டு கல்யாணத்திற்கு நீயென்ன வந்து தாலி எடுத்துக் கொடுப்பது? விலக்கு— சாதியால் உயர்ந்தவன் என்று கூறுகிறப் பார்ப்பனனை!

நம் வீட்டுச் சாப்பாடு பிடிக்காதாம், நம் வீட்டுப் பச்சரசி வேண்டுமாம்!

நான் கூப்பிட்டால் வராத சாமி, நீ மட்டும் கூப்பிட்டால் என் பொருட்டு எப்படி அது வந்து விடும்? இது பித்தலாட்டமல்லவா?

உயிரோடு இருக்கிறவனுக்கு சோற்றுக்குத் தாளம்! செத்தவர்களுக்கு அரிசிபருப்பு கொண்டு சேர்க்க இவன் யார் மத்தியில்?

மூவேந்தர்கள் ஆண்ட நாடு எந்தென்னாடு! அவ்வேந்தர்களின் பரம்பரையினர் யாங்கள். எங்களாலேயே எங்கள் நாட்டை நனிதே ஆளமுடியும்! நலங்கொழிக்கும் நாடாகத் திகழச் செய்ய முடியும்! சுரண்டற் கூட்டமே! வெளியேறு! மீட்டே தீர்ப்போம் திராவிட நாட்டை! என்று முழங்கு! வெற்றி முரசங் கொட்டு என்று உணர்வு கொள்வதெல்லாம், எதனால்.

சுயமரியாதையைக் காக்கவே! தன்மானத்தைப் போற்றவே! போதுமா? போதாது! இன்னும் ஏராளங்கூற வேண்டும்! அப்போதுதான் 'எது சுயமரியாதை?' என்பது நனி விளங்குமென்று நினைக்கும் வாசகர்கள் உடனே எழுதியனுப்பட்டும் 'திராவிடனு'க்கு. அத்தகு உணர்வுக் கருத்துக்களை 'திராவிடன்' இதழ்கள் ஏந்தித் துலங்கட்டும்! வளர்க சுயமரியாதை உணர்வு!

## நற்பணியாற்றும் திராவிடன்

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். எட்டு ஆண்டுகளாக திராவிடத்தை தட்டி யெழுப்பிவரும் திராவிடன் இதழில் 'வந்தைவேள்' திராவிடப் பூங்கா என்னும் பகுதியில் தரும் கருத்துக்கள் சென்றகால அரசியல் நிகழ்ச்சிகள் பலவற்றை நினைவூட்டுவதாயிருக்கின்றன. திராவிடன் ஒன்பதாம் ஆண்டிலும் இதுபோன்ற கருத்துக்களை வெளியிட்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சி. சின்னையா, கூட்டுமாவடி, தஞ்சை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, [illegible]பன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை 1.